
புதிய
விடுதலைப்
பயணம்
சாமுவேல் ஜேக்கப்
THE NEW EXODUS

# புதிய விடுதலைப் பயணம்

சாமுவேல் ஜேக்கப்

நூலின் பெயர் : புதிய விடுதலைப் பயணம்
© ஜனவரி 2003

ஆசிரியர் : துரைராஜ் சாமுவேல் ஜேக்கப்
உரிமை : துரைராஜ் சாமுவேல் ஜேக்கப்

வெளியீடு : ஆர் வர்கீஸ்
தமிழ் கிறிஸ்தவ பேரவை
அரக்கோணம்

வடிவம் : செவன் ஹில்ஸ் கிராபிக்ஸ்
19/1, கந்தப்ப சாலை,
புரசைவாக்கம், சென்னை - 7.

அச்சிட்டோர் : ஜே.ஆர். பிரிண்டெக்
286, கீழ்ப்பாக்கம் கார்டன் சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

விலை : ரூ. 40/-

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அர்ப்பணிப்பு | i |
| அணிந்துரை | ii |
| முகவுரை | vi |
| சிற்பிகள் | viii |
| ஒதுக்கப்பட்டவர்களின் ஒருங்கிணைப்பாளர் | 1 |
| ஆயக்காரரின் அன்பர் | 9 |
| புற இனத்தவரின் புகலிடம் | 15 |
| தாழ்த்தப்பட்டோரின் தலைவர் | 21 |
| அடையாளமற்றோரின் அடைக்கலம் | 29 |
| மழலையருக்கு துணைவர் | 35 |
| விதியை அழித்து வாழ்வதரும் மதியாளர் | 41 |
| கட்டுண்டோரின் காவலர் | 49 |
| அந்நியரின் அடைக்கலம் | 53 |
| விழுந்துப் போனவருக்கு விசுவாச கேடகம் | 57 |
| கடவுள் நம்முடன் - இம்மானுவேல் | 63 |
| புதிய மானிடம் - புதிய பயணம் | 67 |
| உலகின் நம்பிக்கை | 71 |
| A Challenge to Dalit Liberation | 75 |

# அர்ப்பணம்

காலஞ்சென்ற என் தந்தை
ஜேக்கப் துரைராஜ்
அவர்களுக்கு இந்த புத்தகத்தை
அர்ப்பணிக்கிறேன்.

- ஆசிரியர்

CHURCH OF SOUTH INDIA - DIOCESE OF MADRAS
226, Cathedral Road, Post Box No. 4914, Chennai - 600 086.

**The Rt. Rev. Dr. V. Devasahayam**
Bishop in Madras

Office : 91-44-28113929
28113933
28117629
Res : 28115804
Fax : 28110608

# அணிந்துரை

அன்பு இளவல் ஆயர் **அருள்திரு. து. சாமுவேல் ஜேக்கப்** அவர்களின் அருமைப் படைப்பான **புதிய விடுதலைப் பயணம்** எனும் நூலுக்கு அணிந்துரை வழங்குவதை என் மகிழ்வான பேறாக கருதுகின்றேன். படிக்கத் துவங்கிய நிமிடம் தொட்டு, மனத்தையும், கவனத்தையும் ஈர்த்து, இமை மூடாது, இடைவிடாமல் ஒரே அமர்வில் படித்து முடிக்கும் அளவிற்கு கவர்ச்சிகரமானதும், கருத்தாழமிக்கதுமாகும் புதிய விடுதலைப் பயணம். எளிய, தூய தமிழ் நடையில், திருமறை பொது மொழிபெயர்ப்பின் மேற்கோள்களுடன் இனிய தமிழ் வெள்ளோட்டமாய் அமைகின்றது.

புதிய விடுதலைப் பயணம், உண்மையிலேயே புதிய மோசே, விடுதலை நாயகன் இயேசு பெருமானின் வாழ்வு பணி பற்றிய எழுத்தோவியம், இப்புது விடுதலைப் பயணத்தில் அடிமைத்தளைகளை விடுத்து புதுவாழ்வு, நிறைவாழ்வு பெறுவோர் பலர் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர். ஒதுக்கப்பட்டோரின் ஒருங்கிணைப்பாளர், ஆயக்காரரின் அன்பர், புறஇனத்தவரின் புகலிடம், தாழ்த்தப்பட்டோரின் தலைவர், அடையாளமற்றோரின் அடைக்கலம், மழலையர்க்குத் துணைவர், கட்டுண்டோரின் காவலர்,

அந்நியரின் அடைக்கலம், விழுந்து போனவருக்கு விசுவாச கேடகம், விதியை அழித்து வாழ்வு தரும் மதியாளர் போன்றவை விடுதலை நாயகன் இயேசு பெருமானுக்கு ஆசிரியர் சூட்டும் பெயர்கள்.

இயேசு பெருமானின் தன்மைகளையும் சிறப்பாக எடுத்தியம்புகிறார். அவர் இழந்த, இழக்கப்பட்ட மனுக்குலத்தினைத் தேடி வருகின்றவர். “தனிமையும், போராட்டமும், கவலையும் நிரம்பிய மக்களை ஆண்டவர் தேடிச் சென்றதில் வியப்பில்லை. ஏனெனில் ஆண்டவரின் திருப்பணி இப்படிப்பட்ட நிலையில் உள்ளே மனிதருக்கே உரியது.”

வாழ்வற்றோர்க்கு இறைவன் அருளும் வாழ்வு இலவசமான தெனினும் அது யார் மீதும் திணிக்கப்படுவதில்லை என்று கூறி இறையருளை மாந்தர் விரும்பி ஏற்றிட வேண்டும் என்கிறார் ஆசிரியர். ஒடுக்கப்படுவோரின் விடுதலை நாயகன் ஒடுக்குவோர் மீது பேரச்சம் கொள்கிறார்: “ஆண்டவருக்குக் கோபம் வருமா என பலரும் கேள்வி எழுப்புகின்றனர். எங்கே நீதியும், நியாயமும் புரட்டப்படுகிறதோ, எங்கே மக்கள் உரிமை மீறல் நடக்கிறதோ அங்கே ஆண்டவர் சீறி எழும்புகின்றார்.”

இன்றைய சூழலுக்கேற்ப, இறைவனின் பரந்த கரிசனையை இயேசு பெருமான் செயல்படுத்துவதாக சித்தரிக்கிறார். திருச்சபையில் உள்ள இறைமக்கள் அனைவருக்கும் உரியது இறைவனின் அருட்கொடைகள்: “பலிகளின் கொழுப்பினை ஆசாரியருக்குரிய தாக்காமல், கடவுள் தரும் செழுமையும், வளமும் வாழ்வும் அனைவருக்கும் அளித்து நிறைவாழ்வு பெற அழைக்கிறார்.” இயேசு பெருமான் அந்நியரின் அடைக்கலம், எனவே, சமய, இன பாகுபாடுகளைக் கடந்து அனைவருக்கும் இறையருளை பகிர்ந்தளிக்கின்றார் என்கிறார் ஆசிரியர்.

இப்புதிய விடுதலைப் பயணத்தில் பங்கேற்போர் தன்மைகளையும் சிறப்பாக எடுத்தியம்பப்பட்டுள்ளன. இவர்கள் இறைவனை மட்டுமே சார்ந்து, இறைவனைத் தேடி வாழ்வோர். மற்றும், "உண்மையான உழைப்பாளிகள் தான் கடவுளுடைய பிள்ளைகள். கடவுளோடு இணைந்து வாழும் சிற்பிகள். இவர்கள் கடவுளுடன் இருக்க வேண்டியவர்கள்". இறைவனின் சந்திப்பில், மாற்றம் அடைகின்றவர், சகேயுவைப் போன்று பாவ அறிக்கையும், பாவ பரிகார செயலும் மேற்கொள்பவர். தன்னலமற்ற வாழ்வுக்கு தம்மை அர்ப்பணிக்கின்றவர் விடுதலைப் பயணிகள். "(பத்தில்) ஒரு பாகத்தை மட்டும் தன் வாழ்வுக்கென வைத்துக் கொள்வது மனந்திரும்பிய சகேயுவின் புது வாழ்வினையும், அவர் கடவுளின் மகன்தான் என்ற உண்மையையும் வெளிப்படுத்துகிறது" என்கிறார். இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவது அவர்தம் கடமை. "கடவுளின் திருப்பணி என்பது கடவுளின் விருப்பத்தை ஆற்றும்பணி - தன் விருப்பத்தைத் தேடுகிறவனுக்கு அங்கே இடமில்லை."

இந்நூல் தலித் மக்களின் தன்மைகளையும் எடுத்தியம்புகின்றது. தலித் மக்கள் கடுமையாக உழைப்பவர்கள். தம் உழைப்பால் மற்றவர் வாழ்வை வளப்படுத்தி, தமக்கு மட்டும் வறுமையையே சொந்தமாக்கிக் கொண்டவர்கள். "தலித்துகளுக்குப் பொதுவாக சுயமரியாதை குணமும், போராடும் குணமும் உண்டு. ஆனால் வன்முறையாளர்கள் அல்ல." மற்றும் "மேன்மை பேசும் தலித்துகளுக்குப் பொய் பேச வராது, ஆண்டவரிடம் உண்மையை ஒப்புக் கொள்ளுகிறார்." என்கிறார். அவர்தம் சிறப்பாக நற்செய்திப் பணி நாட்டத்தைச் சுட்டுகிறார். "எந்த உலகம் புறக்கணித்ததோ, அதே உலகில் ஆண்டவரின் வல்ல செயல்பற்றி அறிக்கையிட செல்லுகிறார். தாம் பெற்ற இன்ப அனுபவத்திற்கு அவரே சாட்சியாக மாறுகிறார்." தலித் மக்களின் விடுதலைக்கான

மந்திரத்தையும் எடுத்தியம்புகிறார். "தடை கற்களைப் படிக்கற்களாக மாற்றிக் கொள்வதே வாழ்வின் இரகசியங்களில் ஒன்று."

திருமறைப் பகுதிகளை ஆசிரியர் ஆராய்ச்சிக் கண்ணோட்டத் தோடு எடுத்தாண்டுள்ளது பெரும் பயன் தரும் முயற்சியாகும். தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் ஒப்புமை நற்செய்திப் பகுதிகளோடு உரசப்பட்டுள்ளன. திருமறைப் பகுதிகளின் வரலாற்றுப் பின்னணியம், திருமறை பூகோளம் போன்றன பகுதிகளுக்கு ஒளியேற்றுகின்றன. பெயர் மூலங்களும், பொருளும் விளக்கப்பட்டுள்ளது இந்நூலுக்கு செழுமை சேர்க்கின்றது. திருமறை இன்றைய சூழலுக்கு அறைகூவல் தரும் வண்ணம் இன்றைய சமுதாய சூழல்கள், பிரச்சனைகள், சமூக தகவுகள் ஆகியவற்றோடு தொடர்புபடுத்திக் கையாளப்பட்டுள்ளது. திருமறை அறிவையும், கிறிஸ்தவ அர்ப்பணிப்பையும் வளர்ப்பதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரிகின்றது. நல்லதோர் படைப்பினைத் தந்த ஆசிரியரைப் பாராட்டுகிறேன். அனைத்து இறைமக்களும் இந்நூலினைப் படித்து நிறைவான பயனைப் பெற்று மகிழ இறையாசியை வேண்டுகிறேன்.

**4 சனவரி 2003** **வே. தேவசகாயம்**

பேராயர்

# முகவுரை

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பணி மக்களின் திருப்பணியாகவே இருந்தது. ஆண்டவர் எப்போதும் மக்களுடன் இரண்டறக் கலந்து, அவர்களுடன் உறைந்து (இம்மானுவேல் - கடவுள் நம்முடன்) அவர்தம் விடுதலை மற்றும் நிறை வாழ்வுக்கெனவே செயல்பட்டார். இஸ்ரவேலரின் விடுதலைப் பயணம் சோதனை, சோர்வு முறுமுறுப்பு, கசப்பு என பலவும் கொண்ட வனாந்தர பயணமாக இருந்தது. புதிய மோசேயாகிய ஆண்டவர் இயேசுவின் தலைமை கீழ் அமையும் பயணம் நிறைவும், நிலைவாழ்வும், பாதுகாவலும், மகிழ்ச்சியும், அரவணைப்பும் கொண்டது. ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, உழைத்து உருக்குலைந்துப் போன மக்களுக்கு அங்கீகாரமும், அதிகாரமும், மரியாதையும், மனிதநேயமும், மன்னிப்பும், இறைமக்கள் என்ற உரிமையும் இப்புதிய விடுதலைப் பயணம் பெற்றுத்தந்தது. ஆண்டவரின் விடுதலைப் பயணத்தில் பங்கு பெற்று நிறைவாழ்வு பெற்ற சிலரின் அனுபவ சிதறல்களை தொகுத்து வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டவரின் விடுதலைப் பணியும், பயணமும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரியதல்ல, அடிமைத்தனமும், ஒடுக்கப்படுதலும் காணும் இடம் எங்கும் ஆண்டவர் தன்னை அதில் ஈடுபடுத்திக் கொள்ளுகிறார். பாடுறும் மக்களின் விடுதலையில் தம் அடியவரையும் ஈடுபட செய்கிறார். உலகில் அடிமைத்தனம் நீங்கும் வரை ஆண்டவரின் பயணத்திற்கு முடிவில்லை. அவரது அழைப்பினை பெற்ற அடியவர் திருப்பணிக்கும் முடிவில்லை.

கடந்த இருபத்தைந்து ஆண்டுக்கால திருப்பணி பாதையில் சந்தித்த அனுபவங்களையும், கற்ற நூற்களையும், ஆற்றப்பட்ட அருளுரைகளையும் அடிப்படையாக கொண்டே இந்நூல் மலர்ந்துள்ளது. காலஞ்சென்ற என் தந்தை ஜேக்கப் துரைராஜ் அவர்களின் சமூக பணிகளும், ஒருங்கிணைந்த சென்னை வேலூர் பேராயத்தின் உபத்தலைவராக இருந்த அருள்திரு. ஜோசப் ஜான் அவர்களின் கீழ் தீனபந்துபுரத்தில் பணிபுரிந்த அனுபவங்களும்,

திருமறையின் கடவுளை பாடுறும் மனுக்குலத்தின் விடிவெள்ளியாக காணச் செய்து, திருமறை எழுத்துக்களை என்னில் செயல் வடிவமாக்கிய தமிழ்நாடு இறையியல் கல்லூரியும் என்னில் ஏற்படுத்திய பாதிப்புகளே என் திருப்பணியின் அச்சாரங்கள். இந்த அச்சாரங்களின் தாக்கங்களே என் அருளுரைகளின் பிறப்பிடம்.

என் அருளுரைகளையும் சிந்தனைகளையும் எழுத்து வடிவில் கொண்டு வர என்னை ஊக்கப்படுத்தியவர் என் மனைவி விக்டோரியா. அருளுரைகளையும், கருத்துக்களையும் எழுது என அன்புக் கட்டளையிட்டவர் முன்னாள் பேராயர் அசரியா அவர்கள். ஆயர்களின் கருத்துக்களை நூற்களாக மலர வேண்டும் என ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் பேராயர் வே. தேவசகாயம் அவர்களே என் கருத்துக்கள் நூலாக மலர்ந்ததற்கு காரணர். இவர்கள் யாவருக்கும் என் நன்றி ஏறெடுக்கிறேன்.

இந்நூலினை பிழைத்திருத்தம் பார்த்து உதவி நல்கிய என் பிள்ளைகள் ஜாஷ்வா சாமுவேல், பியுலா, எழுத்து வடிவமைத்து தந்த (மாஸ்) திரு. கிறிஸ்டோபர் ராஜன் மற்றும் பல வண்ண அட்டையுடன் நூலை அச்சிட்டு உதவிய ஜேஆர். பிரிண்டெக் திரு. மோசஸ் ஹேமகரன், இதனை வெளியிட்ட தலித் கிறிஸ்தவ பேரவை செயலர் திரு. ஆர். வர்கீஸ் மற்றும் நண்பர்கள் யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

எம்மை தூசியிலிருந்தும், குப்பை மேட்டிலிருந்தும் கைத்தூக்கி மீட்பளித்து புதுவாழ்வளித்த (சங்கீதம் 113:7) ஆண்டவருக்கு மாட்சியுண்டாக இந்நூலினை நாகலாபுரம் குருமண்டலத்திலுள்ள கைவேலி எனும் எங்கள் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள புதிய ஆலய ஒப்படைப்பு நாளான 6 : 10 : 2002 அன்று பேராயர். வே. தேவசகாயம் அவர்கள் ஜெபித்து அர்பணித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இது என்னுடைய சிறிய முயற்சி, இந்நூலினை வாசிப்பவர்களுக்கு இன்னும் திருமறை கற்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும், ஆசியும் உண்டாகும் என நம்புகிறேன்.

எல்லாப் புகழும், மாட்சியும் ஆண்டவருக்கே!

**ஜனவரி - 2003.** **து. சாமுவேல் ஜேக்கப்**

# சிற்பிகள்

விண்ணை முட்டும் மலைகளும்
விரிந்து பரந்த கானகமும்
பசுமை தழுவிய வயல்வெளியும்
எம்
மூதாதையரின் இருப்பிடம்.

கானக காரிருளும்
கட்டாயமாக்கப்பட்ட சாதியமும்
உடைந்துப்போன மானிடமும்
ஒடுக்கப்பட்ட உரிமைகளும்
ஒருங்கே கொண்டது அவர் வாழ்வு

இருளில் ஒளியாக
ஒடுக்குதலில் துணையாக
புறக்கணிப்பில் உறவாக
குறைவில் நிறைவாக
கறை திரை நீக்கி
கல்வி கண் தந்து
அடிமை விலங்கொடித்து
விடுதலை சாசனம் எழுதி
புது வாழ்வும், உறவும் ஈந்த
புதிய பயணத்தின் தலைமகன்
புதிய மோயிசன் எங்கள்
இயேசு நாயகர்
புண்ணிய பாதம் பணிகிறேன்.
அன்பும் பண்பும் தந்து
அறிவும் ஆற்றலும் ஈந்து
இறைப் பற்று நிலை வாழ்வை
முறையாக பயிற்றுவித்து
இறைப்பணிக்கென என்னை
காணிக்கையாக்கிய என்
பெற்றோரை வணங்குகிறேன்.

கானக பறவையாக
கல்லூரியில் வளைய வந்த
கடையவனை, வீணனை
கண்டெடுத்து கடைந்தெடுத்து
கடவுளின் அருட்பணிக்காய்
நிலைப்படுத்திய மாமனிதர்
நியுபிகினாரை வணங்குகிறேன்.

அருட்பணியின் இலக்கணங்களை
அரவணைப்பில் கற்றுத் தந்து
ஏற்றமிகு பொறுப்புகளை
ஈந்து மகிழ்ந்த
சுந்தரனாரை வணங்குகிறேன்.

அன்பின் ஊடே கண்டிப்பு
ஆன்மீகம் நடுவே கடமை
திருமறை சார்பு வாழ்வு
பொருள் சாரா வாழ்வே மெய்வாழ்வு என
புதிய தரிசனங்களை இலக்கணமாக்கி
திருப்பணி நிர்வாகத்தை
திறம்பட சொல்லித் தந்த
மாசில்லா அசரியாவை வணங்குகிறேன்.

அறிமுகமற்ற இளம் வேனிற் காலத்தில்
அடையாளம் கண்டு இன்முகம் காட்டி
இளைஞர் பணி தொட்டு இன்று வரை
இறைப்பணி பொறுப்புகளை
மகிழ்வுடன் பகிர்ந்தளித்து
ஆக்கம் உறவும் நல்கும்
தேவ சகாயத்தை வணங்குகிறேன்.

தூசியிலிருந்த என்னை
தூக்கியெடுத்து, உடன்தாங்கி
வாழ்வளித்து உயர்வு தந்து
விடுதலைப் பயணத்தில் முன்செல்லும்
இறைமகன் இயேசுவுக்கு
இச் சிறிய நூலை காணிக்கையாக்குகிறேன்.

# 1

## ஒதுக்கப்பட்டவர்களின் ஒருங்கிணைப்பாளர்

(மத்தேயு 9:9-13)

மனிதரிடையே வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகள், பிரிவினைகள் மலிந்து கிடக்கின்றன. சமயம், பாரம்பரியம், சட்டத்திட்டங்கள், ஏன் இறைவழிபாடுகூட மனிதரிடையே பிரிவினைகளை ஏற்படுத்துகின்றன. வலிமை உடையவன் ஆளுகிறான். எளிமை கொண்டவன் ஏமாற்றப்படுகிறான். இல்லாதவன் இன்னும் இல்லாதவனாகிறான். இருப்பவனே இன்னும் பெரியவனாகிறான். ஏற்றத் தாழ்வுகளுள்ள இவ்உலகில் மக்களிடையே எழும் பெரும் கேள்வி "கடவுள் யார் பக்கம்" அல்லது "கடவுள் ஏன் இப்படிப்பட்ட அநீதியை அனுமதிக்கிறார்?" இதற்கு பதில் என்ன? ஆண்டவர் எப்போதும் ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மக்களுடன் தான் இருக்கிறார் என்பதே திருமறை தரும் பதிலாகும்.

ஒதுக்கப்பட்டவர்களுடன் உறவு கொள்பவர் ஆண்டவர் இயேசு என்ற நற்செய்திக்கு சான்றாக, அவர் மத்தேயுவுக்கு அருளின அழைப்பில் காணலாம்.

**அழைப்பிற்க்கு அடிபணிந்த அடியவர்:**

ஆண்டவர் தெரிந்தெடுத்த பன்னிரு அப்போஸ்தலர் பெயரும் மூன்று நற்செய்தி நூல்களிலும் இடம் பெறுகிறது (மத் :10:1-4:மா:3:13-19: லூ:6:12-16) மூன்று நூற்களும் மத்தேயுவின் பெயரைக் குறிக்கின்றன. சுங்கத் துறையில் வரி வசூலித்துக் கொண்டிருந்த மத்தேயுவை ஆண்டவர் அழைத்த நிகழ்ச்சி மத்தேயுவில் விவரமாக தரப்பட்டுள்ளது (மத்;9;9-13). மாற்குவும், லூக்காவும் இவர் பெயரை 'லேவி' எனக் குறிப்பிடுகின்றனர். பெயரில் உள்ள மாற்றம் தவிர, மற்றப்படி அழைப்பை பற்றிய குறிப்பு மத்தேயுவில் உள்ளது போலவே இவ்விரு நற்செய்தி நூல்களிலும் காணப்படுகிறது (மா:2;13-17; லூ;5;27-32). நற்செய்தி நூல் உருவான காலத்தில் (கிபி70-க்குப்பின்) மத்தேயு என்ற பெயர் அனைவருக்கும் தெரிந்த பெயராக இருந்தது. லேவி என்ற பெயர் மறைந்து போயிற்று. மத்தேயு என்ற பெயர் பிரபலமாயிருந்தபடியினால், ஆண்டவரின் அழைப்பை பெற்றவர் மத்தேயுவே என்று முதல் நற்செய்தி நூல் காட்டுகிறது. சுருங்கக் கூறின் 'மத்தேயு' - 'லேவி' இருப்பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றன.

யூத சமயத்தில் ஒவ்வொரு பெயருக்கும் ஒரு பொருள் இருக்கும். 'மத்தேயு' என்ற பெயரின் பொருள் 'கடவுளின் கொடை' எனப்படும். கலிலேய பகுதியில் ஊழியத்தினை துவக்கின ஆண்டவர், ஏற்கனவே அப்பகுதியை சேர்ந்த பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு பிலிப்பு நாத்தான்வேல் என்று ஆறு பேரை

தெரிந்துக் கொண்டார். இந்த ஆறு பேரும் ஆண்டவரின் அடியவராக மாறி இருந்தனர். இப்போது, ஏழாவது உறுப்பினராக மத்தேயு அழைக்கப்படுகிறார்.

மத்தேயு கலிலேய பகுதியை சேர்ந்தவர். கலிலேய பகுதிகளில் ஊழியம் செய்யும் ஆண்டவரை அவர் அறிவார். ஆண்டவரின் வல்லச் செயல்களைப் பற்றியும் அறிந்தவர். எனவே, மததேயு இப்போதுதான் ஆண்டவரைக் காண்கிறார் என நிச்சயம் சொல்லமுடியாது. அப்படியே ஆண்டவரும் பல முறை மத்தேயுவைக் கண்டிருப்பார். வரிவசூல் செய்யும் மையத்தினை கடந்து செல்லும் போதெல்லாம் ஆண்டவர் மத்தேயுவை பார்த்திருப்பார். ஆண்டவருடன் இணைய வேண்டும் என்ற ஆவல் நிச்சயம் மத்தேயுவுக்குள் இருந்திருக்கும். அதற்குரிய வாய்ப்பு எப்போது கிடைக்கும் என மனம் ஏங்கியிருக்கும். ஏக்கமும் எதிர்பார்ப்பும் கொண்டவருக்கு வந்ததொரு நற்செய்தி. ஆம் ! ஆண்டவரே, எதிரே நின்று அழைக்கிறார். அவ்வழைப்பு சாதாரணமானதல்ல. 'என்னைப் பின் செல்' என்ற கட்டளையே தருகிறார். இவ்வளவு நாள் தூரமாயிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஆண்டவரை அருகில் கண்டதும், அழைப்பைக் கேட்டதும் மத்தேயு ஓடோடிச் சென்று சேர்ந்துக் கொள்ளுகிறார்.

திறமை, கல்வி, செல்வாக்கு, பாரம்பரியம் கொண்டு அமைவது அல்ல அழைப்பு. அழைப்பு கடவுளின் அருட்கொடையே ஆகும். அழைப்பில் மேலோங்கி நிற்பது கடவுளின் அருளே. இதில் மானிடர் எவரும் மேன்மை பாராட்ட முடியாது கடவுளே அழைப்பு தருகிறார். முந்தி செயல் படுகிறவரும் அவரே. நீங்கள் என்னைத் தெரிந்துக் கொள்ளவில்லை; நான் உங்களைத் தேர்ந்துக் கொண்டேன் (யோ15:16). ஏழைகளையும்,

வறியவரையும் கைதூக்கி எடுத்து உயர்குடி மக்களிடையே அமரச் செய்கின்றார் (சங் :113:7:8,). ஆண்டவரின் அழைப்பினை பெற்றவர் யாவரும் தங்கள் நிலையை உணர்ந்து தகுதியற்ற தங்கள் வாழ்வினைத் திரும்பிப் பார்த்து, கடவுள் அருளும் அழைப்புக்கு கீழ்படிந்தனர். ஆபிரகாம் முதற்கொண்டு அனைவரும் அழைப்புக்கு கீழ்படிந்தமையால், இறையருளை முழுவதுமாக பெற்று இன்னும் சாட்சியிடுகின்றனர். ஆயக்காரர் மத்தேயுவும் தம் நிலையை சீர்தூக்கி பார்த்திருப்பார். ஆண்டவரின் அருளை பெற உடனடியாக கீழ்படிந்து அனைத்தையும் விட்டு பின்னே செல்லுகின்றார் (லூக்கா 5:28).

**ஒதுக்கப்பட்டவர் உயர்த்தப்பட்டவரானார்:**

எகிப்திலிருந்து தமஸ்கு செல்லும் பாதையில் கப்பர்நகூம் அமைந்துள்ளது. கப்பர்நகூம் வரி வசூல் செய்யும் மையம். ரோம பேரரசின் மண்டல ஆளுநர் பிலிப்புவின் எல்லையிலிருந்து ஏரோது அந்திபாஸ் ஆளுநரின் எல்லை வழியாக எடுத்து செல்லும் அனைத்துப் பொருட்களுக்கும் வரி வசூலிக்கப்படும், இந்த மையத்தின் முக்கிய பொறுப்பில் இருந்தவர் மத்தேயு. கலிலேயா, ஏரோது அந்திபாஸ் ஆளுநரின் நேரடி ஆட்சியில் இருந்தது. இந்த ஏரோது ஒரு பாதி யூதர். கி.மு. 4 முதல் கி.பி.39 வரை குறுநில மன்னராக இருந்தவர். யோவான் முனிவரை சிரச்சேதம் பண்ணியவர், யூதமக்களின் வெறுப்பையும், வரலாற்றில் கொடியவர் என்ற பெயரையும் பெற்றவர். இக் கொடியவரிடம் பணிபுரிந்த மத்தேயுவை மக்கள் வெறுத்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. அதுமட்டுமல்ல, ஆயக்காரர்கள் உண்மையற்றவர்கள் என்ற கருத்து பரவலாக இருந்தது. சட்டத்திற்க்கு புறம்பாக அதிக வரி வசூல் செய்து மக்களை சுரண்டி பிழைப்பவர்கள், ஏமாற்றுக்காரர்கள் என்ற

கருத்தும் மக்களிடையே இருந்தது. குறிப்பாக மக்கள் இவர்களை வெறுக்கக் காரணம், வேற்று நாட்டுத் தலைவனுக்கு பணிபுரியும் ஆயக்காரர் இனத்துரோகிகள் எனத் தீர்மானிக்கப்பட்டனர். இப்படி, மக்களால் வெறுக்கப்பட்ட பணியினை செய்த மத்தேயுவும் யூதரின் வெறுப்புக்குள்ளானவர் என்பது தெளிவு.

யூத பாரம்பரியத்தில் கீழ்கண்ட பணியினை செய்கிறவர்கள் அசுத்தமானவர்கள், பாவிகள் என அழைக்கப்பட்டனர், கழுதை மற்றும் ஒட்டகம் ஓட்டுபவர்கள், கப்பலோட்டிகள், வியாபாரிகள், மேய்ப்பர்கள், தோல் பதனிடுவோர் இவர்களுடன் ஆயக்காரரையும் சேர்த்து அசுத்தமானவர்கள் என்ற பட்டத்தை யூத சமுதாயம் இவர்கள் மேல் சுமத்தியது.

கடினமாய் உழைக்கும் மக்கள் இவர்கள்; ஆனால் உழைக்காமலேயே சமய சட்டங்களை பேசும் தலைவர்கள் உழைக்கும் வர்க்கத்தினை அசுத்தர் என்றும் பாவிகள் என்றும் கூறுவதுதான் வேடிக்கையானது. உண்மையான உழைப்பாளிகள் மதிப்பீடு இழந்தவர்கள் என சமய வல்லுனர்கள் தீர்ப்பளிக்க, ஆண்டவரோ இவர்கள் தான் கடவுளின் பிள்ளைகள், கடவுளோடு இணைந்து உழைக்கும் சிற்பிகள், இவர்கள் கடவுளுடன் இருக்க வேண்டியவர்கள் என்று உலகிற்கு உணர்த்தும் பொருட்டு மத்தேயுவை அழைக்கிறார். மற்றவர்கள் உழைப்பில் சுரண்டி வாழ்பவர்களுக்கு எதிராக ஆண்டவர் செயல்படுகிறார். ஆண்டவரின் அழைப்பும், அங்கிகாரமும் உழைக்கும் மக்களுக்கே சொந்தம். சமய, சமுதாயத்தால் தள்ளப்பட்டவர்களே இறையரசின் பிள்ளைகள்.

சமயமும் சட்டமும் பேசும் தலைவர்கள் தங்களை

தேவை' என்ற பதிலை கேட்டவுடன் நிச்சயம் பரிசேயர் மகிழ்ந்திருப்பர். ஏனெனில் அவர்கள் பார்வையில் பாவிகள் தான் பிணியாளிகள். ஆகா! ஆண்டவர் எவ்வளவு சரியாக சொன்னார் என்று அகமகிழ்ந்திருப்பர்.

இவர்களுக்கு பதில் தரும் ஆண்டவர் ஒரு திருமறை பகுதியை பயன் படுத்துகிறார், "பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" (ஓசே:6:6). இரக்கம் என்ற சொல்லுக்கு சரியான பொருள், "உறுதியான மாறாத உடன்படிக்கை அன்பு." (loyal covenant love). கடவுள் தம் மக்களுடன் கொள்ளும் அன்பு மாறாத உயரிய அன்பு. பாவ மனிதரை அவர்தம் தகுதியற்ற நிலையில் ஏற்றுக் கொள்ளும் அன்பு. மனிதர் பிற மனிதருடன் கொள்ள வேண்டியதும் இத்தகைய அன்பே. ஓசேயாவில் சொல்லப்படும் கடவுளின் அன்பு அழிவற்ற முடிவில்லா அன்பு. இஸ்ரவேலர் எத்தகு பாவம் செய்திருப்பினும் மீண்டும் மீண்டும் தேடி செல்லும் அன்பு.

புதிய இஸ்ரவேலை உருவாக்க வந்த ஆண்டவர் இங்கு தீர்க்கராக நின்று அழைப்பு தருகிறார். தன் அன்பின் உறவிற்கு அனைவரையும் அழைக்கிறார். மற்றவருடனும் அன்புக் கொள்ள சொல்லுகிறார். தங்கள் குறையை உணர்ந்தவர்கள் ஆண்டவருடன் சேர்ந்து வாழ்வு பெறுகின்றனர். மத்தேயுவின் இல்லத்திற்கு வந்தவர்கள் தங்கள் வாழ்வை மாற்றிக் கொண்டார்கள். ஆண்டவருடனும் மற்றவருடனும் உறவுக் கொண்டு மகிழ்ந்திருந்தார்கள். தங்கள் நோவினை சொல்பவர்கள்தான் சுகம் பெறமுடியும். நோயிருந்தும், எனக் கொன்றுமில்லை என்கிறவர்கள் தங்களை கெடுத்துக்கொள்ளுகிறார்கள். உண்மையில் நோவு பிடித்தவர்கள் பரிசேயரே, ஆயக்காரர் அல்ல. ஆயக்காரர் தங்கள்

பாவத்தை உணர்ந்தவர்கள் மனம் திரும்பி அறிக்கையிட்டார்கள். பாவங்களிலிருந்து விடுதலை பெற்றார்கள் (லூக் 18:10-14). ஆனால் பரிசேயரோ தங்கள் தோல்விகளை மறைத்து மற்றவர்கள் தோல்விகளை சுட்டிக்காட்டி தங்களை உயர்த்திக் கொள்ளுகிறார்கள்.

ஆண்டவரே எங்களை ஆராயும் மனமும், மனம்திரும்பும் உள்ளமும், உண்மையும் மற்றவர்களையும் உண்மையாக நேசிக்கவும் அருள்தாரும்.

• • •

# 2

## ஆயக்காரரின் அன்பர்

(லூக்கா:19:1-10)

மனித ஆளுமை (Personality) என்பது ஆவி, ஆன்மா, உடல் என்ற மூன்றும் இணைந்தது ஆகும். வலிமையும் வளமையும் மனிதனை உயர்வாக காட்டினாலும் உடல் அமைப்பும், பணியும் மனித வாழ்வை சீர்குலைய செய்யும். வளமாக வாழ்பவர்கள் உடற்கூறு குறைவினால் குன்றிப் போவதுண்டு'. பணம் பத்தும் செய்யும்' என்றாலும் எதிரே வாழ்த்திப் பேசுபவர்கள், அவர் பின்னே செய்யும் கேலிகளும் ஏளனப் பேச்சுகளும் மனித வாழ்வினை நிம்மதி இழக்கச் செய்கின்றன.

உடலில் குறைவும், வாழ்வில் வளம் இருந்தும் மன அமைதியற்ற சக்கேயு ஆண்டவரை தேடிச் சென்றதில் வியப்பேதும் இல்லை. தனிமையும், போராட்டமும், கவலையும் நிரம்பிய மக்களை ஆண்டவர் தேடி செல்வதிலும் வியப்பில்லை. ஏனெனில், ஆண்டவரின் திருப்பணி இப்படிப்பட்ட நிலையில் உள்ள மனிதருக்கே உரியது என்பதை தம் திருப்பணியின்

ஆரம்பத்திலேயே அறிவித்திருந்தார் (லூ 4:16-21). சிலுவை பாடுகளை சந்திக்க எருசலேமை நோக்கி விரையும் ஆண்டவருக்கு எரிகோவில் தங்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், எருசலேம் பாடுகளை ஏற்க விரையும் வேளையிலும், மனித வாழ்வின் மீட்பு முக்கியமென கருதினபடியால்தான் சக்கேயுவின் வீட்டில் தங்குகிறார். பாடுகளின் வழியே உலகினை மீட்பது கடவுளின் திருச்சித்தம். இங்கேயோ ஒருவர் மீட்பை பெற காத்து நிற்கின்றார். மீட்பு பெற காத்திருக்கும் அந்த ஒருவரை இழக்க மனமின்றி அவரை மீட்கும் செயலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகிறார் ஆண்டவர் (லூக்கா 15:7).

இத் திருமறைபகுதி லூக்காவுக்கே உரியது. இயேசு ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் நண்பர் எனக் காட்ட விளைகிறார் லூக்கா (லூ 5:16,17). லூக்காவின் நூல் புற இனத்திலிருந்தவர்களுக்காக எழுதப்பட்டது. லூக்கா அடிகளாரே ஒரு புற இனத்தவர். ஆண்டவர் தூரமாயிருக்கிறவர்களுக்கும், பாவிகள் எனக் கருதப்பட்டவர்களுக்கும், புற இனைக்களுக்கும் உரியவர், அவர்களை தேடி செல்லுகிறார் என்பதே இந்நூலின் மையசெய்தி.

**பெயருக்கும் வாழ்வுக்கும் பொருத்தமற்றவர்:**

சக்கேயு என்பது யூதப் பெயர். சகரியா எனும் பெயரின் சுருக்கமே சக்கேயு எனப்படும். சக்கேயு என்றால் 'தூய்மை' எனப்படும். Mr. Clean எனப் பெயர் பெற்றவரின் வாழ்வு இருள் சூழ்ந்த வாழ்வாயிருந்தது. சுங்கவரி நிலையத்தில் சக்கேயு முக்கிமான பதவி வகித்திருக்க வேண்டும். அநியாயமாக பொருளீட்டி பெரும் செல்வந்தனாயிருக்க வேண்டும். அநியாய பொருளினை சொந்த நன்மைக்கு பயன்படுத்தியிருக்க வேண்டும்.

எரிகோ மிகச் சிறந்த வியாபார மையம். தினமும் பலவகைப்பட்ட வியாபாரிகளை சந்திக்கும் இடம். உயர்ந்த பதவி,செல்வாக்கு, அநேக பணியாளர்கள் அனைத்தும் பெற்ற சக்கேயுவின் வாழ்வில் நிம்மதி இல்லை. உண்மையற்ற வாழ்வு, ரோம அரசுக்கு பணி, செல்வ செழிப்பு அனைத்தும் கொண்ட இவரை மக்கள் வெறுத்தனர். மனதில் நிம்மதியில்லை, தனிமையான வாழ்வு அனைத்தும் சேர்ந்து அவரை அலைக்கழிக்கும் வேளையில் ஆண்டவரின் வருகையை கேள்விப்படுகிறார், பார்க்க துடிக்கிறார்.

**மதிப்பையும், பதவியையும் மறந்து மீட்பு பெற துடிப்பவர்:**

பாவிகளுக்கும், ஆயக்காரருக்கும் நண்பரென அழைக்கப்பட்ட இயேசுவைக் காண சக்கேயு விரும்பியதில் வியப்பேதுமில்லை. பதவியும், பணியும், பணமும், தராத நிம்மதி ஆண்டவரிடத்தில் கிடைக்கும் என்று உறுதியாக நம்பி ஓடிச் சென்று மரத்தில் ஏறி ஆண்டவரைக் காண முயலுகிறார். தம்மைத் தேடுபவருக்கு இறைவன் ஒரு போதும் மறைவாயிருந்ததில்லை. 'நீங்கள் கர்த்தரோடிருந்தால்' அவர் உங்களோடிருப்பார். நீங்கள் அவரைத் தேடினால் உங்களுக்கு வெளிப்படுவார் ('2 நாளா: 15:2'). தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள் (மத் 7:7). மனித வாழ்வின் நிம்மதிக்கும் அமைதிக்கும் இருப்பிடம் இறைவன். தூயஅகஸ்தின் தன் வாழ்வினைப் பற்றி எழுதும்போது,

"இறைவனே! நீர், எங்களை உமக்காக படைத்திருக்கிறீர், நாங்கள், உம்மிடம் வராத மட்டும் எங்கள் வாழ்வில் நிம்மதியில்லை", என்கிறார்.

தூய்மையும், அன்பும் கொண்ட ஆண்டவரின் கண்கள் சக்கேயுவைக் காண்கின்றன. விரைவாய் இறங்கி வா என்ற அன்பு கட்டளையும், அவர் வாயிலிருந்து புறப்படுகிறது. நான் உன்

[illegible]

மனந்திரும்புதலும், ஒப்புரவாகுதலும் இறையரசின் முத்திரைகள்:

சக்கேயு உள்ளத்தில் அமைதியும் நன்றியும் கொண்டவராக ஆண்டவரை தம் இல்லத்தில் வரவேற்கிறார். மனித வாழ்வின் மாற்றத்தைத் தாங்கிக் கொள்ளாத கூட்டம், அதிர்ச்சியடைந்து ஆண்டவரை குறைவு சொல்லி முணுமுணுக்கிறது. முணுமுணுப்போருக்கு எப்போதும் ஆண்டவர் தான் பதிலளிப்பார் (லூக்கா 5:30-32; 7:37-42). இங்கு வாழ்வில் மாற்றமடைந்த சக்கேயுவே பதிலளிக்கிறார். மாற்றம் கொண்டவரே இவர். இறையரசின் உண்மைகளை உலகிற்கு சொல்லவேண்டும். அடியவரே இறையரசின் மக்களாக செயல்படவேண்டும் (மத் 22:27-28). ஆண்டவருக்கும் சக்கேயுவுக்கும் நடந்த உரையாடல் பற்றிய குறிப்புகள் ஏதும் இப்பகுதியில் இல்லை. ஆனால், ஆண்டவரைக் கண்டு, அவரோடு உரையாடிய சக்கேயுவின் வாழ்வில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. உடனடியாக தன் பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பினார். பின்னர் பிறருக்கு விரோதமாய் இழைத்த குற்றங்களை அறிக்கையிட்டு அவர்களோடு ஒப்புரவாகிறார். இந்த இரண்டும் அவருடைய அறிக்கையின்

மூலம் தெளிவாய் அறிய முடிகிறது. 'எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால்' (வ8) என்ற வரிகள் சக்கேயு தன் தவறை உணர்ந்து பாவ மன்னிப்புக்காக ஏறெடுத்த அறிக்கையாக அமைந்துள்ளது. திருச்சட்ட அளவிற்கு அதிகமாக பெறுவதும் பிறரை ஏமாற்றி பொருட்களை அபகரிப்பதும் பாவம்; பாவசெயலுக்கு நிச்சயம் பரிகாரம் செய்யப்படவேண்டும் (யாத் 22:1-7; லேவி 6:2-7). ஆண்டவரை சந்தித்ததால் ஏற்பட்ட மாற்றம் பாவ அறிக்கையாகவும், பாவ பரிகார செயலாகவும் சக்கேயுவுக்கு அமைகிறது.

யூத சட்ட வாழ்வில் வளர்ந்த சக்கேயு, தன் வருமானத்தில் தசமபாகத்தினை செலுத்துவிட்டு, மீதமுள்ள ஒன்பது பாகத்தில் தன் வாழ்வினை அமைத்துக் கொண்டார். இப்போது புதுவாழ்வுக்குறியவராய், தன் தேவைக்கான ஒரு பங்கினை மட்டும் வைத்துக் கோண்டு மீதமுள்ள ஒன்பது பாகத்தினை மற்றவர்களுக்கு அளிக்க முன் வருகிறார். தன்னிடமுள்ள பத்து பாகத்தில் பாதியை (ஐந்து பாகம்) ஏழைகளுக்கும், நான்கினை (நான்கு பாகம்) அநியாயமாக பிறரிடத்தில் வாங்கினதற்கு பதிலாக தந்து விட்டு, ஒரு பாகத்தினை மட்டும் தன் வாழ்வுக்கென வைத்துக் கொள்ளுவது மனந்திரும்பிய சக்கேயுவின் புதுவாழ்வினையும், அவர் கடவுளின் மகன் தான் என்ற உண்மையையும் வெளிப்படுத்துகிறது.

**வாழ்விழந்தவர் வாக்களிக்கப்பட்டவரின் மகனானார்:**

ஆண்டவர் சக்கேயுவை ஏற்றது மாத்திரமல்ல, அவரை ஆபிராகமின் மகன் என அறிக்கையும் செய்கிறார். கடவுளை முழுமனதுடன் பற்றி கடவுள் அருளிய வார்த்தைகளில் உறுதியும், நம்பிக்கையும் கீழ்படிதலும் கொண்டு வாழ்ந்தவர் ஆபிரகாம், (ஆதி12:1-12). எனவே அவர் 'விசுவாசிகளின் தகப்பன்' என

[illegible]

[illegible]

* * *

# 3

## புற இனத்தவரின் புகலிடம்

**(மாற்கு 7:24-30)**

உலக மக்களில் எழுபத்தைந்து விழுக்காடு, பெண்களைப் பற்றி ஒரு பொதுவான எண்ணம் கொண்டுள்ளனர். அது என்னவெனில், "பெண்களுக்கு ஒன்றும் தெரியாது". பெண்கள் தனிமையிலும், இருளிலும் இருக்க வேண்டியவர்கள்; கல்வி அவர்களுக்கு அவசியமில்லை; சுருங்கக் கூறின், பெண்கள் அடிமைகளாக கருதப்படுகின்றனர். ஆனால், உண்மையில் பெண்கள் அமைதியும், ஆழ்ந்த அறிவும் நற்சிந்தையும், கடவுள் பற்றும் கொண்டவர்கள். அத்தகு குணமுடைய பெண் ஒருவர் ஆண்டவரிடம் அன்பு வாதம் புரிந்து தம்மையும் தன் மகள் வாழ்வையும் மீட்டுக் கொண்டார் என்பதையே இத் திருமறைபகுதி சுட்டுகிறது.

ஆண்டவர் சென்ற தீரு, சீதோன் பகுதி பலஸ்தீனாவின் வட பகுதியில் உள்ள இடம் ஆகும். மத்திய தரைக் கடலை ஒட்டிய இப்பகுதி இந்நாளைய லெபனன் ஆகும். ஆண்டவரை சந்தித்த பெண் சீரோ பெனிசிய குலத்தை சேர்ந்தவர். இப்பகுதி

கலிலேயோவை அடுத்து கெனசரேத் ஏரியிலிருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள இடம். இங்கு வாழ்பவர்கள் பிறப்பாலும் சமயத்தாலும் புற இனத்தவர் என அழைக்கப்பட்டனர். தம்மை ஏற்காத இஸ்ரவேலரை விட்டு பிரிந்து (மத் 13:54-58) பிற இடங்களுக்கு ஆண்டவர் புறப்பட்டு செல்லுகிறார். ஆண்டவருக்கு அனைவரும் உரியவர்கள். தேவையிலிருப்போரை தேடிச் செல்லுவதே அவர் பணியின் திட்டம்.

**பலமுறை ஓரங்கட்டப்பட்டவரின் கண்ணீர் வேண்டுதல்:**

ஆணாதிக்க சமுதாயத்தில் முழுவதுமாய் ஒடுக்கப்பட்ட பெண், இவர். அடிமைகளை விட கேவலமாக நடத்தும் ஆதிக்க சமுதாயத்தால் துன்பப்படுபவர். இவர் ஒரு கிரேக்கப் பெண். புறஇனத்தவர் வாழும் இடமோ, அன்னிய பகுதி. யூத மக்களிடையே ஒருக்காலும் சேர்த்துக் கொள்ளப்படாத பகுதியிலி ருந்து வருகிறவர். இப் பெண்ணின் வாழ்வு முழுவதும் போராட்டத்திற்குரிய வாழ்வு. இப்போது மகளும் நலிந்துப் போய் படுத்த படுக்கையாயிருக்கிறாள். இத்தகு நிலையில் ஆண்டவரின் வருகையை அறிந்தவர், ஓடோடிச் சென்று உதவி கேட்கிறார். ஆண்டவர் மீது அசையாத நம்பிக்கையும், விசுவாசத்தையும் கொண்டபடியால் அவரை தாவீதின் மகனே என அழைக்கவும் செய்கிறார் (மத்.15:22). இயேசுவை மேசியா என்று கண்டுக் கொண்டவர்கள், ஆண்டவரே, தாவீதின் மகனே என அழைக்கின்றனர் (மத்.9:27; 20:30). தச்சன் மகன் அல்லவோ என்று கேலி செய்யும் மக்களிடையே (மத்:13:55-58) தாவீதின் மகனே என தஞ்சம் புகுந்து கண்ணீர்விடும் இந்த அபலைக்குத்தான் ஆண்டவர் அருள் உரியதாயிருந்தது.

**அருள் புரியும் ஆண்டவரின் அன்பு வாதம்**

அருள் வேண்டி வந்தவரிடம் ஆண்டவர் மிக

கடுமையான சொற்களை சொல்வதுப் போல் இந்த உரையாடல் நமக்குக் காட்டுகிறது. ஆண்டவர் எவரையும் இழிவாக பேசவோ, கருதவோ மாட்டார். தம்மைத் துன்பபடுத்தும் மக்களிடையே நேசித்து அன்பு பாராட்டுபவர் (லூா:23:34), இப்பெண்ணை குறைவாக மதிப்பிடவில்லை என்பது இப்பகுதியை ஆழ்ந்து கற்றால் தெரியவரும். பொதுவாக, யூதர் தங்கள் இனத்தல்லாதவரை நாய்கள் போல் கருதி மிக இழிவாக பேசுவர். யூதரின் தவறான போதனையைக் கண்ட பவுல் அடிகளார் அவர்களை நாய்கள் எனக் குறிப்பிடுகின்றார், (பிலி:3:2). ஆண்டவர் இங்கு நாய்கள் என்று சொல்லாமல் 'நாய்குட்டிகள்' (Little Dogs) என்கிறார். கடவுளின் செல்லக் குட்டிகள் புறஇனத்தவர் எனப் பொருள்படும். வீட்டிலுள்ளவர்கள் இஸ்ரவேலர். அவர்களை விசாரிக்க வந்தவர் ஆண்டவர். அவர்களை விசாரித்த பின்தான் வீட்டிலுள்ள பிற செல்லக் குட்டிகளை (புற இனத்தவரை) விசாரிக்க கவனிக்க முடியும். வீட்டிலுள்ளவர்களின் உணவையே தான் செல்லக்குட்டிகளுக்கு தரவேண்டும். ஆனால், வீட்டு பிள்ளைகள் முந்தி சாப்பிடுவர். பிள்ளைகளுக்கு பின்னரே செல்லக் குட்டிகளுக்கு உணவு தரப்படும். பிறகு, ஏன் செல்லக்குட்டிகள் (புற இனத்தவர்) அவசரப்பட வேண்டும் என்று ஆண்டவர் அன்பு வாதம் செய்கிறார்.

**பற்றுறுதியாளரின் பணிவான எதிர்வாதம்:**

பக்தரின் பணிவை மட்டும் கடவுள் விரும்புவதில்லை. மாறாக அவரின் போராடும் குணத்திலும் அவர் மகிழ்ச்சி அடைகிறார். யாக்கோபு, தாவீது, இன்னும் பல தீர்க்கரின் வாழ்வு இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டு. இப்படி கடவுளிடம் போராடி இறை ஆசி பெற்றவர்களுடைய வரலாறு அறிந்த இக் கானானியப் பெண், தாழ்மையோடும் கூர்மதியோகும் ஆண்டவர் கூறிய ஒப்பீட்டைத் தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளுகிறார்.

இப்பெண்ணின் எதிர்வாதம் மிக மிக சிறப்பானது. வீட்டில் பிள்ளைகள் இருப்பர். செல்லக் குட்டிகளும் வீட்டில் தான் வளரும் இந்த செல்லக் குட்டிகள் பிள்ளைகளின் தட்டில் உணவு அருந்தாது ஆனால் பிள்ளைகள் சாப்பிடும் போது கீழே விழும் உணவுப் பொட்களை இந்த செல்லப் பிராணிகள் தாராளமாய் உரிமையுடன் பொறுக்கித் தின்னும். இப்படி சாப்பிடுவதற்கு தடை ஏதும் இல்லை. வீட்டிலிருப்போரும் இதனை அனுமதிப்பர். அப்படியே, ஆண்டவரின் மீட்பு அவருடைய சொந்த மக்களுக்குரியது. சொந்த மக்களுக்கு செய்யப்படும் மீட்பு பணியின் மூலம் வரும் சிறிய சிறிய வல்லச் செயல்கள் புற இனத்துவருக்கு செய்தால் போதுமே. சிறிய வல்ல செயல்கள் புற இனமக்களிடையே செய்யப்படும் போது இதனால் சொந்த மக்களுக்கு இழப்பு ஏதுமில்லை. சமுதாயத்தில் பெண்ணாக, அடிமையாக, புற இனத்தவராக, யூத எல்லைக்கு அப்பாற்பட்டவராக வாழும் தன்னைப் போன்ற அபலைகளுக்கு ஆண்டவரின் உதவியின்றி வேறு வழியில்லை. ஆண்டவரே! நீரே என் அடைக்கலம் என முழுமையாக தன்னை அர்பணித்து தன் மகளின் வாழ்வுக்காக போராடுகிறார்.

### இறைப்பற்றுக் கொண்டோரே இறைஆசி பெற முடியும்:

இக்கானனிய பெண்ணின் எதிர்வாதத்தைக் கண்டு ஆண்டவர் சினமடையவில்லை. மாறாக, அப்பெண்ணின் ஆழ்ந்த இறைப்பற்றினைக் கண்டு வியப்புறுகிறார். பற்றுக் கொண்ட இந்த அடியவரின் சொற்கள் ஆண்டவரை இன்னுமொரு வல்ல செயலை செய்ய வைக்கிறது. இப்பெண்ணின் பற்றுறுதியால் இவரின் மகள் சுகம் பெறுகிறார். நம்பிக்கையுடன் வேண்டுபவர் இறை அருள் பெறுவது மட்டுமல்ல, ஆண்டவர் குறிப்பிடும் கடவுளின் தெரிந்தெடுத்த கூட்டத்தை சேர்ந்தவர் (மத்:15:24) என்பதும் தெளிவாக அறிய முடிகிறது. நம்பிக்கையுடன் வரும் புற இனத்தவர் யாவரும் நலம் பெற்றார்கள் என்பது நமக்குத் தெரியும். இவர்கள்

யாவரும் ஆண்டவரின் ஒரு சொல்லினால் நலம் பெற்றவர்கள் என்பதும் தெரியும். ஆனால் இப்பகுதிகளை ஆழ்ந்து நோக்கினால் அறியப்படும் உண்மை என்ன வென்றால், ஆண்டவர் இவர்கள் அருகே செல்லவுமில்லை, தொடவுமில்லை, ஆனால் சுகம் பெற்றார்கள் இவர்கள் என்பதே விசுவாச செய்தி (மத்:8:5-13: லூ : 17:12-19: யோ:4:46-54)

தன் வாழ்வில் உள்ள தடைகளைக் கண்டு சோர்ந்து போகாமல் தன் மீட்புக்காவும் தன் மகளின் நலனுக்காகவும் தடைகளை மீறி செயல்படும் இப்பெண், விடுதலைக்காக போராடும் மக்களுக்கு ஒரு முன்னோடி. வாழ்வில் ஏற்படும் தடை கற்களை வாழ்வின் முன்னேற்றத்திற்கான படிக்கற்களாக மாற்றிக் கொள்வது அவசியம், விதி, சதி என்று வாழ்வினை நோக்காமல் கடவுளைப் பற்றிக்கொள்வதே மதி ஆகும்.

தடை கற்களை படிக்கற்களாக மாற்றிக் கொள்வதே வாழ்வின் இரகசியங்களில் ஒன்று

*"One of the secrets of life is to make*
*Stepping Stones out of Stumbling Blocks"*

**Jacks Penn**

• • •

# 4

## தாழ்த்தப்பட்டோரின் தலைவர்

**(யோவான் 4 :4-42;)**

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்ட ஓரங்கலிடப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட மக்கள் அனைவரும் 'தலித்துகள்' என அழைக்கப்படுகின்றனர். 'தலித்' என்ற சொல்லின் பொருள் உடைந்த' ஒடுக்கப்பட்ட' (broken and oppressed) எனப்படும். உரிமை இழந்து வாழ்விழந்து மதிப்பிழந்து துன்புறும், பாடுபடும் அனைவருமே தலித்துகளாவர். திருமறையிலும் இச்சொல் காணப்படுகிறது. எபிரேய மொழியில் 'Dal' என்ற அடிச் சொல்லின் பொருள் வலிமையற்ற, நலிவுடைய (Weak and frazil) எனப்படும். சாதி . இனம், சமயம், அரசியல், பொருளாதாரம் மற்றும் பண்பாட்டின் அடிப்படையில் ஒடுக்கப்படுகிற யாவரும் தலித்துகளே. இறைவனின் படைப்பில் பாகுபாடுகளில்லை. ஏற்றத் தாழ்வுகள் இல்லை. இறைவனின் பார்வையில் எல்லோரும் சமம். மனிதரால் உருவாக்கப்பட்ட பிரிவுகளை உடைக்கவும், அழிக்கவுமே ஆண்டவர் இயேசுவின் திருப்பணி

அமைந்திருந்தது. புறக்கணிக்கப்பட்ட மக்களுடன் தம்மை இணைத்துக் கொள்ளுவதிலோ அல்லது அவர்களின் விடுதலை வாழ்வுக்கான செயல்களை புரிவதிலோ ஆண்டவர் ஒரு போதும் தயக்கம் காட்டியதில்லை.

ஆண்டவர் தம் இறைப்பணி காலத்தில் ஒதுக்கப்பட்ட சமாரியருடன் நல்லுறவு கொண்டிருந்தார். அவர்களும் கடவுளின் பிள்ளைகளே; கடவுளை பின்பற்றி அவர்தம் சித்தத்தை நிறைவேற்றுபவர்கள் இவர்கள் என போதித்தார். அவர்களுக்கு உதவி செய்தார். (லூக்கா. : 9:51-56:10:30-37: 17:11-19). உச்சக்கட்டமாக சமாரியா கிராமத்திற்கே சென்று, சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பெண்ணுடன் நிலைவாழ்வு மற்றும் வாழ்வளிக்கும் தண்ணீரைப் பற்றிப் பேசி அப்பெண்ணுக்கும், அவரை சார்ந்த கிராமத்துக்கும் மீட்பினை அருளினார்.

ஆண்டவர் சந்தித்த சமாரிய பெண் ஒரு தலீத். சமுதாயத்தால் ஒரு முறை, இருமுறை அல்ல பல முறை ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டவள்.

1. ஆணாதிக்க சமுதாயத்தால் அடிமைகளை விட கேவலமாக நடத்தப்படும் பெண்.
2. சமயத்தால் மாறுபட்டவர்.
3. அரசியல் அமைப்பால் புற இனமாக கருதப்பட்டவர்.
4. வாழ்வினை பலரால் பங்கிடப்பட்டு நிலைக்குலைந்தவள்.

**ஆணவ அதிகாரத்தால் அழிந்துப் போன சமாரியா:**

கி.மு. 885 - 874 வரை இஸ்ரவேலரை ஆண்ட மன்னன்

ஓம்ரி இம் மன்னன் 'சாமர்' என்பவரிடமிருந்து ஒரு மலையை 80 கிலோ வெள்ளிக்கு வாங்கி அம்மலை மீது நகர் ஒன்றினை ஏற்படுத்தினார். அந்நகருக்கு மலையின் உரிமையாளரான சாமர் என்பவரின் பெயரைக் கொண்டு சமாரியா எனப் பெயரிட்டார் (1 அரசர் 16:24). சீரியாவின் படைபெடுப்புகளும், அதனைத் தொடர்ந்து அசிரியாவின் படைபெடுப்புகளும் சமாரியாவின் மேல் எப்போதும் இருந்தது. கி.மு. 725இல் ஐந்தாம் சல்மனசர் சமாரியாவை முற்றுகையிட்டு இஸ்ரவேலரை சிறை பிடித்தார். கி.மு. 722 இல் இரண்டாம் சரகோன் சமாரியாவை வென்று சமாரியரை சிறைப்பிடித்தார், சமாரியருக்கு பதிலாக பாபிலோனியாவை சேர்ந்த ஐந்து மாவட்ட மக்களை குடியமர்த்தினர். இம் மக்கள் சமாரியாவில் குடியேறி இஸ்ரவேலருடைய பழக்க வழக்கங்களையும், சமய நம்பிக்கைகளையும் பின்பற்றினர். ஆயினும், பாபிலோனிய வழிபாடுகளை விட்டுவிடவில்லை. இதனால் யாவேயின் கோபத்திற்கு ஆளானார்கள். வழிபாட்டில் இவர்களை சீர்படுத்தும் பொருட்டு சிறைபிடிக்கப்பட்ட ஆசாரியர் ஒருவரை இவர்களிடம் அனுப்பி யாவே வழிபாட்டினை பின்பற்ற பணிக்கப்பட்டனர். இஸ்ரவேலருடன் திருமண உறவில் ஈடுபட்டு, அவர்களுடன் ஒருங்கிணைந்த இம்மக்களின் வழித் தோன்றல்களை 'சமாரியர்' என அழைத்தனர் (2 அரசர்16.8:17). எஸ்றாவின் காலத்தில் சமாரியர் அதிகமாக வெறுக்கப்பட்டனர். அரசியலமைப்பாலும், சமய நம்பிக்கையாலும் வேறுபட்ட சமாரியரை யூதர்கள் தாழ்த்தபட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், என்று சொல்லி ஒதுக்கி வைத்தனர். யூதர்கள் சமாரியரின் பொருட்களை தொடாமலும், எதனையும் அவர்களிடமிருந்து பெறாமலும் முற்றிலும் அவர்களை ஒதுக்கி வைத்தனர். கி.மு.64-63 காலத்தில் ரோமர் சமாரியாவை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அவர்களுக்கு சமய உரிமையை தந்தனர். ஆனாலும்

ஆண்டவரின் காலத்தில் சமாரியர் யூதர்களால் மிக அதிகமாக வெறுக்கப்பட்டனர் (லூக்கா9:51 - 56).

யூதேயாவிலிருந்து கலிலேயா செல்லுவதற்கு பொதுவழி சமாரியா வழியே. இவ்வழியாக செல்ல மூன்று நாட்கள் பிடிக்கும். ஆனால் பொதுவாக யூதர்கள் சமாரியா வழியில் செல்லாமல், அவ்வழியை புறக்கணிப்பர். ஆண்டவரோ சமாரியா வழியை தெரிந்தெடுத்து செல்லுகிறார். இதற்கு குறிப்பிட்ட நோக்கமும் காரணமும் இருக்கிறது. ஆண்டவர் 'சீகார்' எனுமிடத்திற்கு செல்லுகிறார். முற்காலத்தில் இதற்கு 'சீகேம்' எனப் பெயர்வழங்கப்பட்டது. யாக்கோபு எமோரியரிடமிருந்து இவ்விடத்தை நூறு வெள்ளிக்கு வாங்கினார். இங்கு ஒரு பலி பீடத்தை ஏற்படுத்தி அதற்கு "எல் 'எலோயி இஸ்ரவேல்" எனப் பெயரிட்டார். இதன் பொருள் 'கடவுள்: இஸ்ரவேலரின் கடவுள்.' சமாரியரும் கடவுளின் பிள்ளைகளே என நிலைநாட்டவே ஆண்டவர் இங்கு செல்லுகிறார். யாக்கோபு தன் சகோதரன் ஏசாவினாலும், மாமன் லாபானாலும் மற்றும் சூழ உள்ள மக்காளாலும் பல காலக் கட்டங்களில் ஒடுக்கப்பட்டவர். அப்படிப்பட்டவருக்கு கடவுள் எப்போதும் துணையாக இருந்து எல்லாவற்றிலுமிருந்தும், குறிப்பாக ஏசாவின் கரங்களிலிருந்தும் தப்புவித்ததால் நன்றி உணர்வுடன் கட்டப்பட்ட பலிபீடம் அது (ஆதி:33:19,20). கடவுள் ஒடுக்கப்பட்டவரை ஆதரித்து தூக்கி விடுகிறார் எனக் காட்டவே சீகாருக்கு ஆண்டவர் பயணம் செய்கிறார்.

**தலித்துகளுடன் தலித்தாய் மாறின ஆண்டவர்:**

ஆண்டவர் சீகாருக்கு வந்து ஒரு கிணற்றின் அருகே அமருகிறார். இங்கு பயன்படுத்தப்படும் கிரேக்க சொல் πηγη ஆகும்.

இதன் பொருள் தரையில் அமருதல். கிரேக்கத்தில் இன்னுமொரு சொல் உண்டு. அது 'Pege' ஆகும். இதன் பொருள் மேலே அமருதல். ஆண்டவர் இச்சமாரிய பெண்ணுடன் பேசவும், அண்டிக் கொள்ளவும், தன்னை ஐக்கியபடுத்திக் கொள்ளவும் அந்த கிணற்றருகே கீழே அமருகிறார். கடவுளின் மகன், தூயவர், அதிகாரம் இவையனைத்தையும் துறந்து ஒன்றுமற்றவராக தரையில் அமருவது என்பது மக்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளுவதையே காட்டுகிறது. ஆண்டவர் இங்கு எசேக்கியல் தீர்க்கரை பின்பற்றுகிறார். ஆசாரியரான எசேக்கியலை கடவுள் அழைத்து, தீர்க்கராக மாற்றி, சிறையிருப்பின் மக்களுடைய பணிக்காக அனுப்புகிறார். தீர்க்கரும் சிறையிருப்பின் மக்களிடையே தங்கி அவர்களை விசாரித்து, ஆறுதல்படுத்தி வழி நடத்துகிறார். அவர்கள் அமர்ந்திருந்த இடத்திலேயே நானும் அவர்களுடன் அமர்ந்திருந்தேன் என்கிறார் (எசே:3:15;). இங்கு ஆண்டவரும் சமாரியருடன் அமர்ந்து சமாரியராகவே மாறி அவர்கள் வாழ்வின் விடுதலைக்கு தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகிறார்.

**நலிவுற்றவரின் உண்மையான அறிக்கை :**

நலிவுற்றிருந்தாலும் மேன்மையுடன் வாழ நினைப்பவர்கள் தலித்துகள். தங்களுக்கு குறைவுகள் இருப்பினும் மற்றவர் முன் மண்டியிட மறுப்பர். .தலித்துக்களுக்கு பொதுவாகவே சுயமரியாதை குணமும், போராடும் குணமும் உண்டு. ஆனால் வன்முறையாளர்கள் அல்ல; ஆண்டவரிடம் வாதம் செய்யும் இப்பெண்ணும் இத்தகையவரே. மனிதருக்கும் மற்றப் பிராணிகளுக்கும் தண்ணீர் தேவை; அதற்காகத் தான் யாக்கோபு இக்கிணற்றை ஏற்படுத்தினார். வறண்ட இடமாகிய பாலஸ்தீனாவில் உள்ள கிணற்றைக் காட்டிலும் இந்த யூதர் (ஆண்டவர்) தரும் வாழ்வளிக்கும் நீர் உயர்ந்ததோ என சந்தேகம் அப்பெண்ணுக்கு.

ஏற்பட்டதில் தவறில்லை. ஆண்டவரோ பொங்கி வழியும் அழியாத நிலைவாழ்வுக்குரிய ஊற்றைப் பற்றி பேசுகிறார். இஸ்ரயேலர் நீட்டப்பட்ட வாழ்வுக்கென காத்திருந்தனர். நிலைவாழ்வுக்குரிய ஜீவத் தண்ணீராகிய கடவுளை விட்டுவிட்டார்கள் (எரே2:13). இலவசமாய் வாழ்வு பெற அழைப்பு வருகிறது (எசா55:1). வருங்காலத்தில் கடவுள் நகராகிய எருசலேமில் இது முழுமை பெறும் (எசா 47:1-12) என எதிர்பார்ப்புடன் முன்னுரைக்கப்பட்ட ஜீவ தண்ணீர் இதோ. இங்கே மெசியா மூலம் வந்துள்ளது. அழியா வாழ்வு ஆண்டவரில் அருளப்படுகிறது. அவர் அருளும் ஜீவ தண்ணீர் தூய ஆவியருடன் இணைந்தது (யோ7:37-39). ஆண்டவர் அத்துடன் தம் உரையாடலை நிறுத்திவிடவில்லை. அப்பெண்ணின் வாழ்வியல் போராட்டத்தை சுட்டிக் காட்டுகிறார். ஆணாதிக்க கூட்டத்தில் அப் பெண்ணின் வாழ்வு நிலை குலைந்துப் போனதை வெளிப்படுத்துகிறார். இப்பெண்ணின் வாழ்வில் ஐந்து கணவர்கள் இருந்ததுப் போலவே சமாரியர் வாழ்விலும் ஐந்து கடவுளர் இருந்தனர். அசிரியாவிலிருந்து சமாரியாவுக்கு வந்து குடியேறியவர்கள் தங்களுடன் ஐந்து இறை நம்பிக்கைகளையும், பலிபீடங்களையும் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஓர் இறை வழிபாட்டினைவிட்டு பல இறை வழிபாட்டுடையவர்களாய் வாழ்ந்தார்கள். சமய வாழ்வும், தனிவாழ்வும் (2 அர:17:31 யோ:4:18). சீர்குலைந்த மக்களிடையே விடுதலை ஏற்படுத்த ஆண்டவர் இப்பெண்ணுடன் நீண்ட நேரம் உரையாடுகிறார். அப்பெண்ணுக்கு மதிப்பளிக்கிறார். அவரை மனிதராக அங்கிகாரம் தருகிறார். அவளுடைய கரங்களில் தண்ணீர் வாங்கி பருகுகிறார். வாழ்வியல் போரட்டங்களைக் குறித்து விசாரிக்கிறார்.

உண்மைக்கு பயப்படும் நலிவுற்ற இப்பெண்ணிடம்

ஆண்டவர் உண்மையான வழிபாடு பற்றிப் பேசுகிறார். மெல்ல மெல்ல அப்பெண்ணின் கண்கள் திறக்கின்றன. ஆண்டவருடன் நடந்த உரையாடலில் மனத்தின் எண்ணங்கள் யாவும் வெளியாயிற்று. அவர் வாழ்வின் நிலை படம் பிடித்துக் காட்டப்பட்டது. மேன்மை பேசும் தலீத்துகளுக்கு பொய் பேச வராது. ஆண்டவரிடம் உண்மையை ஒப்புக் கொள்ளுகிறார். தன் இழிவான நிலையை, வாழ்வினை அறிக்கையிடுகிறார். ஆண்டவர் அவளை பாராட்டுகிறார்.

**தலீத் பெண்ணே உலக மீட்பரின் முதல் அருட்பணியாளர்:**

யூத சமயத்தாலும் இடத்தாலும் ஓரங்கட்டப்பட்டவர் தன் வாழ்வின் மாற்றத்தினால் ஏற்பட்ட மகிழ்வை பகிர்ந்துக் கொள்ள ஊருக்குள் ஓடி அறிவிக்கிறார். இந்த மீட்பர் தனக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் உரியவர், வந்து பாருங்கள்! என அழைப்பு விடுக்கிறார். தன் வாழ்வினை வெளிப்படுத்தியவர் இந்த மேசியா என்ற அப்பெண்ணின் வார்த்தையைக் கேட்டு, பலர் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டனர். இன்னும் பலர் ஆண்டவரை நேரில் கண்டு உலகின் மீட்பர் என அறிக்கையிட்டனர்.

புறக்ககணிக்கப் பட்டவருக்குத்தான் புகலிடம் தேவை. உணவற்றவருக்குத் தான் உணவு தேவை. பல நூறு ஆண்டுகளாக ஒதுக்கப்பட்ட மக்கள் ஆண்டவர் மூலம் கடவுள் பிள்ளைகளானார்கள். விடுதலையின் வேட்கையில் இருந்தவர்கள் இவர்கள். எனவேதான் ஆண்டவரிடம் ஓடி வந்தார்கள். வந்தவர்கள் கண்டுக் கொண்டார்கள்; வாழ்வு தரும் வள்ளலை ஏற்றுக் கொண்டார்கள். கடவுள் இப்படி ஏற்படுத்தும் விடுதலை வாழ்வில்தான் மகிமை அடைகிறார். எளிய ஒடுக்கப்பட்ட

[illegible]
[illegible]

The God of the Bible is one who manifests God's glory through the weak and oppressed [illegible] through their empowerment and transformation.

V. Devasahayam.

# 5

## அடையாளமற்றோரின் அடைக்கலம்

**(யோவான் 8:1:11)**

உலக மக்கட் தொகையில் ஐம்பது விழுக்காடுகள் பெண்கள் உள்ளனர். ஆண்களை விட அதிக சக்தி கொண்டவர்கள் என உயிரியல் குறிப்பிட்டாலும், எழுபது விழுக்காடுகள் உலகப் பணியில் உழைக்கும் வர்க்கத்தினர் என புள்ளி விவ்ரங்கள் குறிப்பிட்டாலும், பெண்கள் உலகமெங்கும் மிகவும் கீழினமாகவே கருதப்பட்டு வருகின்றனர். இந்த சமுதாயத்தில் பெண்களுக்கு குரலும் இல்லை: வாழ முகமும் இல்லை: சுயமாக இயங்க முடியாதவர்கள், ஆணுதிக்க உறவால் மட்டுமே முகவரி பெறுபவர்கள். தந்தைக்கு மகளாக, கணவனுக்கு மனைவியாக, மகனுக்கு தாயாக மட்டுமே குறிக்கப்படும் பெண்; வேறு வகையில் அடையாளம் சொல்ல முடியாதவர். சமுதாயம் பெண்மையின் அடையாளத்தை அழிக்கிறது.

“பெண்களின் நிலையும், சமுகத்தால் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனமாக கருதப்படும் சூத்திரர் மற்றும்

தாழ்த்தப்பட்டோர் நிலையும் ஒன்றே" என டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுகிறார். 'பூமியும், அவர்கள் இல்லமும் தான் பெண்களுக்கு பரலோகம்; அவர்தம் கணவர் கடவுள்' என்பதே பொதுவான நியதி. இந்து தர்ம சாத்திரப்படி, பெண்கள் திருமணத்திற்கு முன் தந்தையை சார்ந்தும், இளமையிலும் திருமண வாழ்விலும் தன் கணவரே கண்கண்ட தெய்வமாகவும், வயதான காலத்தில் மகனின் பாதுகாவலிலும் வாழவேண்டும். தங்கள் வாழ்வு முழுவதும் சுய வெறுப்பும் (Self denial) சுய தியாகமும் (Self Sacrifice) கொண்டவர்கள்தான் பெண்கள்

சினிமா, பத்திரிகை, மற்றும் கலை தொடர்பு சாதணங்களில் பெண்கள் எனப்படுபவர் வியாபார பொருட்களாக கருதப்படுகின்றனர். ஆணாதிக்க மகிழ் மன்றத்தின் போதை பொருட்கள் இவர்கள். ஆண்கள் சட்டைகளை மாற்றுவதுப் போல் தங்கள் தேவைகளுக்கேற்ற காலங்களில் பெண்களை மாற்றிக் கொள்ளுகிறார்கள். ஆண்களின் உடல் பசியை ஆற்றிட பாலி யல் தொழிலாளராக கட்டாயபடுத்தப்படுகின்றனர். பாலியல் தொழில் இவர்கள் மீது கட்டாயமாக திணிக்கப்படுகிறது. சமூகத்தில் உயர் பதவியிலிருப்பவர்கள் தங்கள் அதிகாரத்தால் பெண்களை நாசம் செய்தாலும், தங்கள் வாழ்வு மற்றும் குடும்ப நலன் கருதி அமைதியாக எவரையும் எதிர்க்க முடியாமல் நடைப் பிணமாக வாழும் பெண்கள் நிலை மிக மிக கொடியது.

பெண்களுக்கு இழைக்கபடும் அநீதி இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல ஆயிரம் ஆண்டுகளாகவே உலகில் உண்டு என்பதையே இப்பகுதிக்குரிய திருமறை வெளிப்படுத்துகிறது. 'விபசாரத்தில் பிடிபட்ட பெண்' என திருமறை குறிப்பிடினும் சமுதாயத்தால் வியாபாரமாக்கப்பட்ட பெண் என்று சொல்லுவதே தகும். காரணம், இப்பெண் இத்தொழிலை விரும்பி ஏற்கவில்லை;

மாறாக ஆணாதிக்க சமுதாயம் இவர் மீது இப்பழியையும் பாவத்தையும் சுமத்தியுள்ளபடியால் 'வியாபாரம்' என்ற சொல்லே சாலப் பொருந்தும்.

**சமயமும் சட்டமும் மனிதனின் அடிமை சாசனங்கள் :**

'சட்டம் ஒரு இருட்டறை' என்றார் பேறிஞர் அண்ணா. சமயமும் சட்டமும் தங்களுக்கு ஏற்ப பயன்படுத்தும் அறிவு ஜீவிகள், மற்றவர் வாழ்வு அழிவுக்கென அதனை பயன்படுத்துகின்றனர். சட்டம் தெரிந்தவர்கள் தங்கள் குற்றங்களை மறைக்கவும், தங்கள் தவறுகளை மற்றவர் மீது சுமத்தவுமே பயன்படுத்துகிறார்கள். இத்திருமறைப் பகுதியில் சொல்லப்படும் நிகழ்ச்சியில் இது தெளிவாக தெரிகிறது. தவறு செய்த பெண்ணை கையும் மெய்யுமாய் பிடித்தவர்கள், உடனடியாக அவருக்கு தண்டனை தர துடிக்கிறார்கள்.சட்டம் தெரிந்த இவர்கள் தங்களுக்கு சாதகமாக சட்டத்தை மாற்றுகிறார்கள், தவறு செய்த ஆணும். பெண்ணும் இருவரும் கொல்லப்பட வேண்டும் என்பதே திருச்சட்டம் கூறும் உண்மை (உபா 22:22-24: லேவி:20:10). தங்களை யோக்கியர்களாக காட்டிக் கொள்ளும் இவர்கள் இப்பெண்ணுடன் தகாத உறவில் ஈடுபட்ட ஆண்மகனை விட்டு விட்டு, இவளை மட்டும் குற்றவாளி கூண்டில் நிறுத்தி நியாயம் வேண்டுகிறார்கள். தங்களுக்கு ஒரு சட்டம், பிறருக்கு ஒரு சட்டம் என நீதியை கூறுபடுத்தி வாழும் இவர்களை தலைவர்களாக ஏற்பது எப்படி சாத்தியம்.? பெண்கள் ஆண்களின் சொத்து; பெரும் செல்வந்தர் ஒருவர் தன் இனம் சார்ந்த உயர் இனத்து பெண்ணிடம் தவறாக நடக்க முடியாது; ஆனால், அவரே, தன்னை சார்ந்து உழைத்து பிழைக்கும் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்கிறார். ஏனெனில் இப்பெண்ணால் குரலெழுப்ப இயலாது. அதுமட்டுமல்ல, அம் மனிதரை சார்ந்தே அப்பெண்ணின் வாழ்வும், பணியும் அமைகிறது.

நீதி, நியாயம் எனப் போராடினாலும் தங்கள் அதிகார செல்வாக்கினால் நீதியையும் அழித்து விடுவோர் இவர். இந்த ஏழைப் பெண்ணும் குரல் எழுப்பாததற்கு காரணம் குற்றம் சாட்டுகிறவர்கள் மறைநூல் அறிஞரும், பரிசேயரும். "பெரியவர் செய்தால் அது தவறில்லை" என்ற பழமொழிபோல் இந்த சமயத்தலைவர்களின் தவறுகளை சுட்டிக்காட்ட இயலாமல் முடங்கிவிடும் ஆயிரக்கணக்கான அடிமைகளில் இப் பெண்ணும் ஒருவர்.

**சாட்சியாக வந்தவர்களின் சாயம் வெளுத்துப் போச்சு**

வேடமிடுபவர்களின் வேடம் ஒரு நாள் நிச்சயம் கலையும். வேடம் கலைந்துபோய் பக்தனுக்கு உண்மை தெரியும்போது திருடனுக்கு தேள் கொட்டினதுப் போலாகும். பக்தி வேடமிட்டவர்கள் பக்தர்களை ஏமாற்றலாம். ஆனால் இவர்கள் சாகச கட்டங்கள் ஆண்டவரிடம் ஒரு போதும் பலிக்காது. இங்கும் இப்படித் தான் நடந்தது. திருச்சட்டத்தில் சாட்சிகளின் கூற்று மிக முக்கியம். ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது, எந்த பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால், சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்பட வேண்டும் (உபா15-19). ஆண்டவரிடம் வழக்கு கொண்டு வந்தவர்களே சாட்சியும் சொல்லுகிறார்கள். இவர்கள் வேறு யாருமில்லை, சட்டம் கற்ற மாபெரும் சமயத் தலைவர்கள். ஆண்டவர் அவர்களுக்கு நன்கு தெரிந்த சட்டத்தையே ஆதாரமாக கொண்டு அவர்களை முதலில் கல்லெறிய சொல்லுகிறார். 'கொலை செய்கிறதற்கு சாட்சிகளுடைய கைகள் முந்தியும், எல்லா மக்களின் கைகள் பிந்தியும் இருக்க வேண்டும்' உபா17:7. மனசாட்சியை விற்று வாழும் இவர்களிடம் ஆண்டவர் எழுப்பின கேள்வியினால் ஆடிப்போனார்கள். "உங்களில் பாவ மற்றவர்கள்" என்ற ஆண்டவரின் வினா அவர்களை நிலைகுலைய செய்தது.

பாவிகளான தங்கள் வாழ்வை ஆண்டவரின் சொல் படம் பிடித்துக் காட்டியதால் ஓடிவிட்டார்கள். அதுட்டுமல்ல ஒருவன் 'தன் சகோதரன் மேல் பொய்சாட்சி சொல்லுகிறான் எனக் கண்டால் அவன் தன் சகோதரனுக்கு செய்ய நினைத்தபடியே அவனுக்கு செய்யக் செய்யகடவீர்கள் "(உபா19:16-19) என திருச்சட்டம் கூறுவதால், தாங்கள் கல்லெறியுண்டு சாகுமுன் விரைவாய் ஓடிவிட்டார்கள் என்பதே உண்மை. சட்டத்தைப் புரட்டி எளியவரை மிரட்டி வாழும் தலைவர்கள் ஆண்டவருக்கு முன் நிற்க முடியாமல் ஓடியே விட்டார்கள். உதட்டில் நீதி பேசி மக்களை ஏமாற்றி வாழும் அநீதியாளரின் வேஷம் ஒரு நாள் கலையும் என்பதற்கு பரிசேயர் ஒரு எடுத்துக்காட்டு.

## அருள் ஆண்டவர் அருளிய மனித நேய தீர்ப்பு

காலம் கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதி (Justice delayed, Justice denied) என்பர். ஆண்டவர் இவ்வழக்கினை சட்டத்தின் துணைக் கொண்டு பாராமல் அப்பெண்ணின் வாழ்வு பிரச்சனையாக காண்கிறார். வாழவேண்டிய இளம் வயதினில் ஆண்களின் ஆக்கிரமிப்பினால் சிதைந்துப் போன ஓவியமாய் நிற்கும் அபலைக்கு உதவி செய்ய காலம் தாழ்த்தவில்லை. அங்கே நின்றிருந்த அப்பெண்ணும் தன் பாவ நிலை அறிந்து துக்கித்திருப்பாள், தன் வாழ்வே முடிந்து போனது என்ற நிலையில், நின்றவர், இப்போது தன் மீது குற்றம் சுமத்தியவர்கள் ஓடிவிட்ட பின், ஆண்டவரிடம் தன் வாழ்வை மறைக்காமல் பாவநிலை அறிந்து கண்ணீர் விட்டிருப்பார். பாவிகளை மீட்க வந்த மீட்பர் இயேசு அப்பெண்ணுக்கு பாவ மன்னிப்பளித்தது மட்டுமல்ல, இருள் நீங்கி ஒளியில் வாழும் அருளையும் தருகிறார் (வ12). வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி அவர். ஆண்டவரை பற்றிக் கொண்ட இப்பெண்ணின் வாழ்வில் இனி இருள் இல்லை.

பாவம் முக்கியமில்லை என்பதோ, அல்லது கடவுள் பாவத்திற்குரியவர்களை தண்டிப்பதில்லை என்பதோ இப்பகுதியின் செய்தி அல்ல. பாவம் செய்தவர் மனந்திரும்ப கடவுள் வாய்ப்பளிக்கிறார். மனந்திரும்புகிறவர்கள் இறை அருளை நிறைவாய் பெறுகின்றனர்: எளியவர் புறக்கணிக்கப்படுதலையும், நியாயம் புரட்டப்படுதலையும் கடவுள் ஒரு போதும் அனுமதிப்பதில்லை. பாவியுடன் ஆண்டவர் முகமுகமாய் நின்று பேசுவதின் மூலம் இறை அரசின் உரிமைக்குள் அவர்களைக் கொண்டு வருகிறார் என்பதே நற்செய்தி. அடையாள மற்றோருக்காக, சமுதாய சீரழிவால் நசுக்கப்படுபவர்களுக்காக கடவுளின் பிரிதிநிதியாக, வழக்குரைஞராக ஆண்டவர்எப்போதும் செயல்படுகிறார் என்பதற்கு இப்பகுதி ஒரு நல்ல எடுத்துகாட்டு.

ஊமையரான பெண்ணினத்தை களங்கப்படுத்தி
உறவுகளை கொச்சைப் படுத்தும்
பேய்மை குணம் கொண்ட
ஆணாதிக்கத்தை சிதற செய்த
ஆண்டவரே !
மற்றவரை இழிவு படுத்தி,
நீதியை புரட்டிப்போட்டு
அநியாயத்தில் அகமகிழும்
தீய குணமாற்றி
மேன்மை பேசும் நாவினைத் தாரும்.

• • •

# 6

## மழலையருக்கு துணைவர்

**(மாற்கு:10:13-16.)**

இன்றைய சமுதாயத்தில் வாழ்விழந்தோர் பட்டியலில் குழந்தைகளும் இடம் பெற்றுள்ளனர். குழந்தைகள் பிறப்பிலேயே கேள்விக் குறியாகின்றனர். அவர்கள் தாயின் கருவறையிலிருந்து வெளியே வருவதற்க்குள் குடும்பத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆண் குழந்தை எனில் அது உலகின் காற்றை சுவாசிக்கலாம். கருவிலிருப்பது பெண்ணுனல் அது அங்கேயே கருகிப்போக வேண்டும். கடுஞ் சூழல்களை மீறி பிறந்தாலும் அவர்கள் வளர்ச்சியை மொட்டிலேயே அழித்துவிடுகிறது சமூதாயம். பள்ளி செல்ல வேண்டிய மழலைகள் பணிக்கு செல்லுவதும், பெற்றோர் பட்ட கடனுக்கு இவர்கள் அடிமைகளாக வாழ்வதும், ஆடிப்பாட வேண்டிய வயதில் பாலியல் கொடுமைகளுக்கு உட்படுத்தப்படுவதும் இன்றைய சமுதாயத்தின் மிகப் பெரிய தீமை. மழலைகள் மடிவும் அதிகரித்துள்ளது. விடுதலை வாழ்வு

போதிக்கும் திருச்சபையிலும் இவர்களுக்கு போதிய இடமில்லை என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. ஆண்டவருக்கு மழலைகள் மீது அதிகப் பிரியம். அவர்கள் வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும், கடவுள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகிறார். மோசே, சாமுவேல், தாவீது மற்றும் தீர்க்கர் எரேமியா போன்றவர்களின் வாழ்வில் பங்கு கொண்ட கடவுள், இன்றும் மழலைகளின் வளர்ச்சியிலும், பாதுக்காப்பிலும் வாழ்விலும் அதிக அக்கறை உடையவராக செயல்படுகிறார் என்பதை இத்திருமறை பகுதி மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

**சிசுக்களை மதிக்காத பெரிசுகள்:**

யூதர் தங்களுடைய ஒய்வு நாளில் தங்களின் குழந்தைகளை அருகே அழைத்து ஆசிர்வதிப்பது வழக்கம். மீட்பு திருநாள் (Day of Atonement) பிள்ளைகளுக்கு முக்கியமான நாள். அன்று பிள்ளைகள் உபவாசம் செய்து மறைநூல் அறிஞரிடம் ஆசி பெறுவர். ஆனாலும் குழந்தைகளை யூதர் முக்கியமாக கருதவில்லை. பிள்ளைகள் முதிர்ச்சியற்றவர்கள், மீட்புக்குரிய திருச்சட்ட அறிவு இல்லை என எப்போதும் பிள்ளைகளை ஒதுக்கியே வைப்பர். பெரியவர்கள் இருக்கும் இடங்களில் பிள்ளைகளை அனுமதிப்பதில்லை. பிள்ளைகளுடன் கழிக்கும் நேரம் வீண் என எண்ணுவர். தேவை ஏற்பட்டாலொழிய பிள்ளைகளை எங்கும் பெற்றோர் அழைத்து செல்லுவதில்லை. யூத சமுதாயத்தில் பிள்ளைகளும் பெண்களைப் போலவே மிகவும் கீழ்த்தரமாக நடத்தப்பட்டனர்.

ஆண்டவர் இயேசு யூதேய பகுதியில் வந்தபோது வழக்கம் போல் மக்கள் அவரிடம் கற்றுக் கொள்ள வருகிறார்கள். பரிசேயரோ ஆண்டவரை சோதிக்கும்படி மணவிலக்கு பற்றிய

வினாவை எழுப்புகின்றனர். ஆண்டவர் அவர்களுக்கு தக்க பதில் அளிக்கும் அதே வேளையில், ஆண்டவரிடம் தொட்டு ஆசிர்வதிக்க வேண்டுமென்று பெற்றோர் பிள்ளைகளை அவரோடு கொண்டு வருகின்றனர். ஆண்டவரிடம் கேட்கப்பட்ட கேள்வி குடும்ப வாழ்விலிருந்து பிரிந்து வாழ்தல்பற்றி. ஆண்டவர் அளித்த பதிலினால் நிச்சயம் பரிசேயர் மட்டுமல்ல, சீடரும் அதிர்ச்சியடைந்திருப்பர். இப்படிபட்ட சூழலில் பிள்ளைகள் அங்கு இருப்பதை சீடர் விரும்பாதது ஆச்சரியமன்று.

> "குழந்தைகள் ஆண்டவர் அருளும் செல்வம்
> மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில்" (சங்.127:3)

என பக்தர் குறிப்பிடுவது முற்றிலும் உண்மை. குழந்தைகளற்ற வாழ்வு முழுமையான வாழ்வு அல்ல. மண விலக்கு பெறுவதால் குழந்தைகள் வாழ்வு அழிகிறது. மணவாழ்வும், குழந்தைகளும் பிரிக்கப்பட முடியாத நியமனம். இந்நியமனத்திற்கு எதிராக செயல்படுவோரை ஆண்டவர் கண்டிக்கிறார் (மத்.19:3-11). ஆண்டவர் கண்டிக்கும் மிக முக்கியமான இந்த உரையாடலின் போது பிள்ளைகள் ஏன் அங்கு வரவேண்டும், அவர்களால் தொந்தரவு தானே ஒழிய வேறு பலன் இல்லையே; இப்படி பல எண்ணங்களால் உந்தப்பட்ட சீடர் மழலைகளை புறம்பே தள்ளுகின்றனர்.

**இறைமகனின் கடுஞ்சீற்றம் நியாயமானதே:**

ஆண்டவருக்கு கோபம் வருமா என பலரும் கேள்வி எழுப்புகின்றனர். எங்கே நீதியும், நியாயமும் புறக்கணிக்கப்படுகிறதோ, எங்கே மக்கள் உரிமை மீறல் நடக்கிறதோ அங்கே ஆண்டவர் சீறி எழும்புவதை திருமறையில் காணலாம் (மாற்.1:43;44;3:5;8:18; 11:15-18). மழலைகள் ஆண்டவரிடம் வருவதை தடை செய்த

சீடரைக் கண்டு இயேசு விசனமடைந்தார் என பழைய தமிழ் மொழி பெயர்ப்பு திருமறையில் குறிப்பிடப்படுகிறது(மா:10:14:) மழலைகள் நிலைக்கண்டு ஆண்டவர் விசனமடையவில்லை. மாறாக கடுஞ்சீற்றம் அடைகிறார். குழந்தைகளுக்கு தடைக்கல்லாயிருக்கும் சீடரைக் கண்டு கோபமடைகிறார். இதற்குரிய ஆங்கில சொல் Indignant. இதன் பொருள் 'சீற்றம்;' கடுஞ்சினம் 'வெறுப்பு' எனப்படும். குழந்தைகள் குரலை நெறிக்கும் சீடர் மீது ஆண்டவர் சீறுவது நியாயமே. ஏனெனில், குழந்தைகளுக்கு இடறல் உண்டாக்குகிறவரின் கழுத்தில் ஏந்திரக் கல்லை கட்டி கடலில் தள்ள வேண்டும் என ஏற்கனவே ஆண்டவர் போதித்திருந்தார் (மா:9:42). சிறுவர் எவ்வளவு முக்கியம் என்ற போதனையைக் கேட்டும், வழிவிலகி வாழும் சீடர்மேல் ஆண்டவர் கோபம் அடைவதில் தவறேதும் இல்லை. தலைமை ஆசாரியரும் மற்றும் வேத நூல் அறிஞரும் பிள்ளைகள் மீது கோபம் கொண்ட போது மழலைகள் மூலம் துதி உண்டாகிறது மத்21:16) என பாராட்டின ஆண்டவருக்கு பிள்ளைகள் மேல் கரிசனையும், அன்பும் எப்போதும் உண்டு என்பதையே அவருடைய கோபம் காட்டுகிறது.

**ஆற்றலும் தகுதியும் அற்றவரே இறையரசிற்குரியவர்;**

குழந்தைகளின் நலனில் அக்கறையும், அவர்கள் எதிர்கால வாழ்வில் நாட்டமும் கொண்ட ஆண்டவர், குழந்தைகளை முன்னிறுத்தி இறையரசின் தகவுகளை கற்றுத் தருகிறார். குழந்தைகளுக்குரிய குணதிசயங்கள் மிக சிறப்பானவை. குழந்தைகள்:

1) ஆச்சரிய உணர்வு கொண்டவர்கள்

2) பெற்றோரை சார்ந்து வாழ்பவர்கள்

3) எவரையும் நம்பும், ஏற்கும் குணமுடையவர்கள்

4) பிறர் தவறுகளை விரைவில் மறந்து மன்னிக்கும் குணமும் ஒப்புரவாகும் ஆற்றலும் உடையவர்கள்

5) சுய பெருமை, சுய புகழ்ச்சி கொள்ளாதவர்கள்.

எண்ணற்ற நற்குணமும், களங்கமற்ற மனமும் கொண்டவர்களை சமுதாயம் எப்போதும் ஏற்பதில்லை என்பது வருந்ததக்கது. இப்படிபட்ட குணநலன்களைக் கொண்ட குழந்தைகளைப் போல் அனைவரும் மாறிட வேண்டும் என்பதே ஆண்டவரின் ஆவல். குழந்தைகள் கேள்வி மற்றும் ஆச்சரிய உணர்வுடன் செயல்படுவதுப் போல பெரியவர்களும் இறையரசின் தகவுகளை. ஆச்சரியத்துடனும் ஆர்வத்துடனும் நோக்குதல் வேண்டும்.

மழலைகள் பெற்றோரை முழுவதுமாக சார்ந்து வாழ்வதுப் போலவே அனைவரும் கடவுளை முழுமையாக சந்தேகமற சார்ந்து வாழ வேண்டும்.

பெற்றோர் செய்வது அனைத்தும் தங்கள் வாழ்வின் நலனுக்கே என்று மழலைகள் நம்புவதுப் போலவே கடவுளின் செயல்பாடுகள் அனைத்தும் தங்கள் நலனுக்கென்றும் வாழ்வுக்கென்றும் கடவுள் பெயரில் நம்பிக்கைக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் தங்களுக்குள் ஏற்படும் பூசல்களை உடனடியாக மறந்து மீண்டும் ஒருவரோடொருவர் உறவுக் கொள்ளுவதைப் போலவே, பெரியவர்களும் பூசல்களை மறந்து ஒருவரையொருவர் மன்னித்து ஒப்புரவாகுதல் வேண்டும்.

தங்களின் தற்பெருமைகளை, பேசி உறவுகளை

இழக்காத பிள்ளைகள் போல் பெரியவரும் தங்களைப் பற்றிய புகழ்பாடும் நிலைமாறி கடவுள் புகழ் பாட கற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படிபட்ட மாற்றங்களை தான் கடவுள் விரும்புகிறார். இத்தகு குணநலன்களைக் கொண்ட சிறியவரை இழப்பது கடவுளுக்கு விரோதமானது இத்தகு அன்பு செல்வங்களை ஏற்பவர் ஆண்டவரையும் பிதாவையும் ஏற்றுக் கொள்பவராவர் (லூக்கா:9:46-48).

**சிந்தனைக்கு சில குறிப்புகள்:**

137 மில்லியனுக்கு மேற்பட்ட குழந்தைகள் வறுமை கோட்டிற்கு கீழே வாழுகிறார்கள்.

உலகிலேயே இந்தியாவில் தான் வீதியிலிருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகம் (18 மில்லியன் பிள்ளைகள்)

75% பிள்ளைகள் வாழ்வில் நலமாயிருப்பதற்குரிய வைட்டமின் A பெறுவதற்கு வாய்ப்பற்றவர்கள்.

67% பிள்ளைகளுக்கு கழிப்பிட வசதியில்லை. 1000 பிறப்புகளில் 72 குழந்தைகள் பிறந்தவுடன் உயிரிழக்கின்றனர் (இலங்கையில் 1000 பேருக்கு - 15பேர்).

50% (ஏறக்குறை 59 மில்லியன்) பிள்ளைகளுக்குப்பள்ளி செல்ல அனுமதியில்லை. இதில் 39% பெண் பிள்ளைகள்.

பள்ளியில் சேர்க்கப்டும் பிள்ளைகளில் 50% பள்ளியில் சேர்ந்த முதல் 12 மாதங்களில் கல்வி கற்பதிலிருந்து நிறுத்தப்படுகின்றனர்.

• • •

# 7

## விதியை அழித்து வாழ்வுதரும் மதியாளர்

**(யோவான்: 9:1-41)**

மனிதன் படும் பாடுகளுக்கு காரணம் அவன் விதி என்றும், தலையெழுத்து என்றும் கூறி இருள் சூழ்ந்த வாழ்வில் இருப்பவர் பலருண்டு. துன்பங்களுக்கு காரணம் முற்பிறவி என்றும், ஏழேழு பிறவிகள் எடுத்தாலும் பிறவிப் பயனை அடைய முடியாது என்றும், இதுவே சமய நம்பிக்கை என மக்களை அடிமைப்படுத்தும் சூழலில் நம் நாடு உள்ளது. எது செய்தாலும் அது பாவம் என்ற கருத்தும் மனித வாழ்வின் மையமாக உள்ளது. கடந்த பிறவியின் பலனே இப்போது மனிதன் பெறுகிற பிரதிபலன். இப்பிறவியில் செய்வதற்குரிய பலன் மறுபிறவியில் கிடைக்கும் என்ற சிந்தனையும் மக்களிடையே அதிகமாக காணப்படுகிறது. உயர்குடி பிறப்பினர் தங்கள் செயலின் பலனாக நன்மை அடைவர். அவர்கள் எவ்வளவு குறைகளை செய்திடினும் மீண்டும் தங்கள் இனமான உயர்குடியிலேயே பிறப்பர். ஆனால் சாதிய அமைப்பில் நான்காவது இடத்திலுள்ள சூத்திரரும். சாதியற்ற தலித்துகளும் எவ்வளவு நன்மைகளை செய்திடினும் மீண்டும் மீண்டும் அதே

பிறவியில்தான் பிறக்க முடியும். வேறு சாதிக்கு மாற முடியாது. ஆனால் குறைவுடைய செயல்களினால் இவ்விருவரும் இப்பிறவிக்கு அடுத்த பிறவியாக ஏதேனும் ஒரு மிருகமாகவே பிறக்க இயலும். இவர்கள் வாழ்வில் ஒருபோதும் உயர்வை பெற இயலமுடியாது. இப்படிபட்ட எண்ணங்களை சமய அடிப்படையில் திணிப்பதின் மூலம் சாதியினை ஒருபோதும் மனித வாழ்விலி ருந்து நீக்க முடியாத அளவுக்கு மனிதரை அடிமைப் படுத்தியுள்ளது இந்து சமயம்.

சீடரும் இப்படிபட்ட நம்பிக்கை கொண்டவராகவே செயல்படுவதை இத்திருமறை பகுதியில் காணலாம். இம் மனிதர் குருடராயிருப்பதற்கு காரணம் இவர் செய்த பாவமா அல்லது பெற்றோர் செய்த பாவமா என வினா எழுப்புவதிலிருந்து, இம் மனிதரின் பார்வையற்ற தன்மைக்கு காரணம் இவரின் முற்பிறவியின் செயல்கள் என்ற எண்ணமும், பெற்றோரின் பாவ செயலே என்ற எண்ணமும் சீடர் கொண்டிருப்பதாக அறிய முடிகிறது.

யூதரிடையே இருந்த மிகப் பெரிய எண்ணம் எதுவெனில் மனிதனின் பாவமே அவனுக்கு நோய்களையும், துன்பங்களையும் கொண்டு வருகிறது என யூதர் நம்பினர். (சங்89:32; ஏசா:14-6). பெற்றோரின் பாவ செயல்கள் பிள்ளைகளை பாதிக்கும் என்பதும் யூத நம்பிக்கையில் காணப்படுகிறது. பெற்றோர் குற்றத்தினால் பிள்ளைகள் தண்டிக்கப்படுவார்களேயானால், பிள்ளைகள் எத்தகு நீதியாக நடந்தாலும் அவர்கள் வாழ்வில் ஒருபோதும் நன்மை வராது. பெற்றோர் பலன் பிள்ளைகள் மேல் என்றால், பிள்ளைகளுக்கு வாழ்வே இல்லை. எனவே பிள்ளைகளும் இப்படிபட்ட சூழலில் ஒழுக்கம் தவறி வாழ வாய்ப்பு ஏற்படுகிறது. சமுகம் முழுவதும் தண்டனை பெறும்போது அங்கு

வாழும் நல்லோரும் பாதிக்கப்படுவர். துன்பம் சமுகத்தை அழிக்க அல்ல; தூய்மைபடுத்தவே வருகிறது. எருசலேமில் இருப்பவர்கள் சிறையிலிருப்போரைக் காட்டிலும் நீதிமான்கள் அல்ல. சிறையிலி ருப்போர் பாவிகள் என்ற எண்ணம் பரவலாய் இருப்பினும், எருசேலமிலிருப்பவர்கள் அழிவுக்குரியவர்கள். - சிறையிலி ருப்பவர்களோ பிழைத்திருப்பவர்கள். முன்னோரின் பாவம் பின்னோரை தொடராது என்றும், சங்கிலி பிணைப்பற்று கடவுளுக்கு வாழும் வாழ்வே விடுதலை வாழ்வு என்றும், தனி மனிதன், பிற மனிதர் என்ற கூட்டு வாழ்வும், புதிய உறவும், ஒப்பந்தமும் தீர்க்கர் எசேக்கியலால் சொல்லப்பட்டது (எசே:18:1-32). யோபின் சிநேகிதர் பாவத்தின் பலனாக யோபு வருந்துவதாகக் கூறினர். யோபு தாம் செய்யாத பாவத்தால் தமக்கு நேரிட்ட தீர்ப்பை ஏற்க மறுத்தார் (யோபு:42:7-17).

**மனித வாழ்வின் குறைவுகளை கடவுளின் வல்ல செயல் மாற்ற வல்லது:**

சீடர்களின் மிகப் பெரிய சந்தேகமும் வினாவும் என்னவெனில் பாவத்தின் விளைவினால் வருவது நோய், இது தலைமுறை தலைமுறைக்கும் உரியது. எனவே, மனிதன் நோயிலிருந்து தப்ப முடியாது என்பதே. இந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் ஆண்டவரை வினவுகின்றனர். மனிதனின் துன்பத்திற்கு காரணம் தேடும் சீடர்கள், கடவுளின் வல்ல செயலைப்பற்றியும் சந்தேகம் கொண்டவர்கள், ஆண்டவர் இவர்களுக்கு நீண்ட விளக்கம் ஏதும் தராமல், சிறிய வார்த்தைகளில் எளிமையாக கடவுளின் நோக்கத்தினை சுட்டிக் காட்டுகிறார். மனித வாழ்வு கடவுளால் அருளப்படுவது. அனைவரும் நலமாயிருக்கவே கடவுள் விரும்புகிறார். ஊழ்வினை, தலையெழுத்து, தலைவிதி இவைகளெல்லாம் மனிதரே ஏற்படுத்திக்

கொண்ட சிந்தனைகள் பற்றவர்களின் குறைவுகளுக்கு இடமு னாகுமேயாக்கு சொல்லி தங்களை மேலக்கியர்களாக காட்டுவார்கள் கடவுள் மீது நம்பிக்கையற்றவர்களால் வாழ்வினை, கர்மவினை விதி தலைவிதி எழுதிவைத்தது இல்லையேதான் என்று ஒட்டாரிகளை ஒழித்து நிறைவான வாழ்வினை மனிதருக்கு அருள்வது என்பதுதான் கடவுளின் திட்டம். சாதிய வாழ்வில் மேடு என்பது எட்டாத பாங்களி மனிதனை அடிமைப்படுத்துவது தான் கர்மவினை. சாதி எனும் குழந்தைக்கு கர்மவினைதான் தாய் (Karma is the mother of Caste system) "தீண்டாமையும் கர்மவினை கொள்கையும் சாதியின் அடித்தளங்கள்" என்கிறார் டாக்டர் அம்பேத்கர். இத் தீமையை ஆண்டவரின் வல்ல செயலினால் மாத்திரமே நீக்க முடியும். இந்திய எண்ணம் மீண்டும் வலுப்பெற்ற பழைய அழிக்காமலிருக்க ஆண்டவர் உடனடியாக செயல்படுகிறார். இளைஞருக்கு பார்வை அளித்து புதுவாழ்வை தருகிற ஆண்டவர் தீய நோக்கம் கொண்ட கர்மவினை ஊழ்வினை கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார். கடவுளின் அருட் கொடையோ மனித வாழ்வுக்குரியது.

**ஒளியை விட்டு இருளை நாடும் மதவாதிகள்:**

விதி என்று ஒன்றுமில்லை. கைராசி, முகராசி, தலைவிதி ஊழ்வினை யாவும். தான் வாழ பிறரை ஏமாற்றி, மனித சிந்தனையை முடமாக்கி மதம் என்னும் பெயரால் ஆட்சி புரியும் மேல் தட்டு பிராமணர்களால் திணிக்கப்பட்டதே! கடவுளைக் காட்டாமல் அவர் பெயரில் சட்டங்களை திணித்து மக்களை முட்டாளாக்குவது இவர்களின் தொழில். நாள் நட்சத்திரங்கள் பார்ப்பது காலங்களை நிதானிப்பது அனைத்தும் மனிதரை ஏமாற்றுவதற்காக உருவாக்கப்பட்டதே. மக்களை ஏமாற்றும் இவர்கள் கடவுளை பின்பற்றுவதும் இல்லை; பிறரை கடவுளிடம்

அனுமதிப்பதும் இல்லை. சமயத்தின், பெயரால் மக்களை ஏமாற்றும் யூத மதத் தலைவர்களும் இந்த பிராமணர்களைப் போன்றவர்களே.

மனித வாழ்வு கடவுளின் அருட் கொடையே. கடவுளின் அருளினால் பார்வை பெற்றவரைக் கண்டு கடவுளுக்கு நன்றி செலுத்துவதை விட்டு விட்ட மதவாதிகள், ஆண்டவரை குறை கூறுகின்றனர். ஓய்வு நாளை மதிக்காதவர் என குற்றப்படுத்துகின்றனர். ஓய்வு நாள் ஆசிப்பை முக்கியப்படுத்தும் மதவாதிகள் மனிதவாழ்வுக்கு முக்கியம் தர விரும்பவில்லை. சட்டம் பேசும் தலைவர்கள், மனிதவாழ்வு ஈடேற்றத்திற்கு முன் வராதவர்கள். ஓய்வு நாள் கட்டளையை தந்த ஆண்டவருக்கு, ஓய்வுநாளைவிட மனித வாழ்வு மிக முக்கிமானது. ஓய்வுநாள் என்பது வேலையின்றி இருப்பதல்ல அல்லது உறங்கிக் கொண்டிருப்பதும் அல்ல. கடவுள் எப்போதும், இடைவிடாமல் செயலபடுகிறவர். அவர் ஒரு போதும் ஓய்ந்திருப்பவர் அல்ல (சங் 121 4-: யோ 5:17). கடவுள் தன் படைப்பின் திட்டத்தை நிறைவேற்றி முடித்தார் என்பதே ஓய்ந்திருந்தார் என்ற வசனத்தின் உண்மையான செய்தியாகும். படைப்பு திட்டம் முடிந்திடினும் படைப்பின் செயல்பாடுகள் தொடருகின்றன. பாவத்தின் விளைவினால் ஏற்பட்ட குறைவுகளை நீக்கி புதுவாழ்வு அளிக்க வந்த ஆண்டவர் ஓய்வுநாளை வெறும் கட்டளையாக கருதாமல், மக்கள் வாழ்வு வளமடைய செய்யும் திருநாளாக மாற்றுகிறார். புதுபடைப்பின் புதுயுகத்தின் அடையாளம் இது. (A New sign of the new age of God's work of new creation). இருள் நீங்கி புதுவாழ்வுவின் ஒளியாக பார்வையற்றோருக்கு ஓய்வு நாள் மலருகிறது. ஆனால் இதுவே இருளில் வாழும் மதத் தலைவருக்கு இருளாகவே தோன்றுகிறது.

அருள் பெற்றவர் அறிக்கை செய்தார்:

கடவுளால் உலகை மீட்க அனுப்பபட்டவர், ஒவ்வொருவரும் நலமாயிருக்க செயல்படுகிறார். மக்களால் ஒதுக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு, மக்கள் மத்தியில் இழந்த மதிப்பினை மீட்டுத் தந்து கடவுளின் மகனாக வாழ ஆண்டவர் தீவிரமாய் செயல்படுகிறார். அம் மனிதர் பார்வை பெற்றுக் கொள்ள ஆண்டவர் ஒரு சிறு சொல் சொல்லியிருந்தால் போதும், அவர் சுகம் பெற்றிருப்பார். தன் திட்டத்தில் மனிதன் கீழ்படிதலும், செயலும் இருக்க வேண்டும் என ஆண்டவர் எதிர்பார்க்கிறார். எனவே தான் அம்மனிதரை சீலோவாம் நோக்கி அனுப்புகிறார்.

சீலோவாம் எருசலை நகருக்குள் காணப்பட்டது (எசா:8:6;நெகே:3:15) 'சீலோவஹ்' எனின் அனுப்பித்தல் எனப்படும். இது மிகப் பெரிய அணைக்கட்டு, சீகோனுக்கு வடக்கிழக்கிலிருந்து தென்மேற்காக ஓடும் கால்வாய். கால்வாயில் நீரோட்டம் இல்லை; மக்கள் வேற்று நாட்டு ஆறுகளை தேடுகிறார்கள். சமாரியா மீது வரும் ஆபத்து யூதாவையும் பாதிக்கும் (எசா:5:8), மக்களுக்கு சீலோவாம் பேரில் நம்பிக்கை இல்லை. கடவுள் பேரில் கொள்ளும் நம்பிக்கையினால் அனைத்தும் பெற முடியும். யூதர்களோ கடவுளையும் அவர் அருளிய வாக்கு பண்ணின நாட்டையும் மறந்து வேறு நாடுகளில் வாழ்வு தேடி ஏமாறுகிறார்கள். ஆனால் ஆண்டவரோ, எளிய சிறிய சீலோவாம் மூலம் கூட மனித வாழ்வுக்கு நலம் தர முடியும் எனக் காட்டுகிறார். சந்தித்த எளியவரை அனுப்புகிறார். அவரும் ஆண்டவர் சொல்லுக்கு கீழ்படிந்து செயல்படுகிறார், சுகம் பெறுகிறார். பார்வை அற்ற போது பாவி எனக் கருதி ஒதுக்கிய அதே கூட்டம், இப்போது ஓய்வு நாள் கட்டளையை மீறினார் எனச் சொல்லி ஒதுக்குகிறது.

ஆண்டவரோ அவரைத் தன்னிடம் சேர்த்து ஆறுதல் தந்து தம் சாட்சியாக உலகில் அனுப்புகிறார். எந்த உலகம் புறக்கணித்ததோ அதே உலகில் ஆண்டவரின் வல்ல செயல் பற்றி அறிக்கையிட செல்லுகிறார். தாம் பெற்ற இனிய அனுபவத்திற்கு அவரே சாட்சியாக மாறுகிறார். விதி, கர்மம் எனப்பேசி வாழ்வை இழப்பது மிகத் தவறு. கடவுள் தந்த மதியால் அனைத்தும் வென்று நல்வாழ்வு பெறுவதே இறைவனின் விருப்பம். நோவுக்கும் துன்பத்திற்கும் பாவ காரணம் தேடிக் கொண்டிராமல் கடவுளைப் பற்றி வாழ்வதே மெய்யான பக்தருக்கு அடையாளம். இவர் கடவுளின் பிள்ளையாக முழுமையாக செயல்படுகிறார். விதி அனைத்தும் ஒதுக்கி இறை நீதியே மிகப்பெரியது என அருட்செய்தியை அறிக்கையிடுகிறார். விதி, கர்மம் எனப்பேசி வாழ்வை இழப்பது மிகத் தவறு. கடவுள் தந்த மதியால் அனைத்தும் வென்று நல்வாழ்வு பெறுவதே இறைவனின் விருப்பம். நோவுக்கும் துன்பத்திற்கும் பாவ காரணம் தேடிக் கொண்டிராமல் கடவுளைப் பற்றி வாழ்வதே மெய்யான பக்தருக்கு அடையாளம்.

• • •

# 8

## கட்டுண்டோரின் காவலர்

**(யோவான்:5:1-9)**

இராமநாதபுரம் அருகே ஏர்வாடி எனும் இடம் மனநலக் காப்பகங்கள் நிறைந்த இடம். மனநலம் குன்றியவர்கள் இந்த ஊரில் தங்கினால் சுகம் பெறுவர் என்ற நம்பிக்கை உண்டு. இங்கு வாழும் பலர் தங்களுக்கு சொந்தமான இடங்களில் இத்தகு மக்களை சங்கிலியில் கட்டி வைத்திருந்த சூழலில் தான் 2000 ஆகஸ்ட் திங்கள் 6-ஆம் நாள், ஒரு இல்லத்தில் தீ பற்றி இருபத்தேழு பேர் அங்கேயே துடிக்க துடிக்க இறந்தனர். நானூற்று ஆறு பேர் பல இடங்களுக்கு சிகிச்சைக்காக அனுப்பபட்டனர். மருத்துவ உலகினையே இச்செய்தி அதிர்ச்சிக் குள்ளாக்கியது. காசியிலும் இராமஸ்வரத்திலும் நீராடினால் போதும்; புண்ணியம் கிட்டும் என நம்பிக்கை கொண்டவர்களும் உண்டு. இவர்கள் செயல்களை உற்று நோக்கினால் இவர்கள் கடவுள் படைத்த, நீர், நெருப்பு நட்சத்திரங்கள் மீது நம்பிக்கை கொண்டிருப்பது தெரியவரும், கடவுளின் வல்லமையை அறியாதவர்கள் படைப்புகளை நம்பி ஏமாற்றமடைகிறார்கள்

[illegible]

**ஆண்டவர் [illegible]**

[illegible]

விருப்பத்தை அறிய விரும்புகிறார். 'சுகம் பெற விரும்புகிறாயா' என வினவுவதின் மூலம், தன் கரிசனையை அன்பை வெளிப்படுத்தவும், அதே வேளையில் தேவையுள்ளவரின் மனநிலை பொருத்தே தம் செயல் முழுமை பெறும் என்பதையும் வெளிப்படுத்துகிறார். மிருகம் போன்று விழுந்து கிடக்கும் மனிதரை விட்டுவிட ஆண்டவரின் மனம் இடம் தரவில்லை. ஆனால் அதேவேளையில் தம் அருளை ஏற்கும் மனம் உண்டா என வினவுகிறார் ஆண்டவர் அருள் யார் மீதும் கட்டாயமாக திணிக்கப்படுவதில்லை. ஆண்டவர் அருள் இலவசமாயிருப்பினும் அவர் அருளை பெற கீழ்படிதலும் முழுமையான ஒப்புக் கொடுத்தலும் அவசியம். ஆண்டவரை ஏற்போர் மட்டுமே பேறு பெற்றவராவர்.

### முடக்குவாதம் கொண்டவரின் முரட்டு வாதம்:-

எதையும் இலவசமாக பெறவிரும்புவது மனிதரின் குணம். உதவிட வரும் ஆண்டவரின் வல்லமை அறியாத இவர் தன்னைப் பற்றியும் தன் இயலாமைப் பற்றியும் பேசுகிறார். இவர் தங்கியிருந்த இடத்தின் பெயர் 'பெதஸ்தா'. 'கருணையின் வீடு' என இதற்குப் பொருள். கருணைக் காட்ட வந்த கருணாமூர்த்தியிடம் தன் நிலையை சொல்லுகிறார். தனக்கு யாரும் இல்லை, தான் ஒரு அனாதை: உதவி செய்வார் யாரும் இல்லை எனக்கூறி வேதனைப்டுகிறார். இவர் கூற்று உண்மை என கருதினாலும் கூட இவர் வாழ்ந்த வாழ்வு கேள்வியை எழுப்புகிறது முப்பதெட்டு ஆண்டுக்காலம் உதவி செய்வார் யாருமில்லை என்று இவர் கூறினாலும். இவருக்கு உணவு தர ஆதரவாளர் இருந்திருப்பர். இவருடைய தேவைகளை சந்திக்க நண்பர்கள் இருந்திருப்பர். ஆனால் சுகம் பெறுவதற்கு அவர்களுடைய உதவியை இவர் தேடினதாக தெரியவில்லை. மாறாக படுத்துக்

கிடைக்கும் வாழ்வே மேன்மை. மேலானது எனக் கருதியிருப்பார். இது என் தலைவிதி என நம்பி தன் வாழ்வை நடத்தியிருப்பார். எனவே தவறு, குறையை மற்றவர்மேல் சுமத்துகிறார். யாரும் உதவி செய்யவில்லையே என்ற ஆதங்கமும், தமக்கு முன் வேறு ஒருவர் குளத்தில் இறங்கி விடுகிறாரே என்ற எரிச்சலும், தாழ்வு மனப்பான்மையும், விதி சார்ந்த சமய நம்பிக்கையும் ஆண்டவரின் வல்லமையை அறியாமல் தேவையில்லாமல் இவரை பேச செய்கிறது.

**இறைமகனின் கட்டளைக்கு முன் இயலாமைகள் உடைந்து போயின.**

யூதர் கடவுளின் அருள் பெற்றிருந்தும் அவநம்பிக்கையிலும் சமய வாழ்வின் ஏமாற்றத்திலும் தங்களை ஈடுபடுத்தி வாழ்வை இழந்தனர். புதிய இஸ்ரயேலை படைக்க வந்த மெசியா உடைந்த வாழ்வினை ஒருங்கிணைத்து, சமய வாழ்வின் அவ நம்பிக்கைகளை உடைத்தெறிந்து, புதுவாழ்வு மலர செயல்படுகிறார். படைக்கப்பட்ட தண்ணீரில் மீட்பு வரும் எனக் காத்திருந்தவருக்கு படைப்பாளரே அருகே வந்து மீட்பு தருகிறார். விசுவாசமற்ற, சோம்பலான மனிதரைக் கண்டு ஆண்டவர் சினந்துக் கூறும் சொற்களே 'உன் படுக்கையை எடுத்துக் கொண்டு எழுந்திரு". சோம்பல், எரிச்சல், தாழ்வு மனப்பான்மை அனைத்தையும் உதறி விட்டு எழ கட்டளையிடுகிறார். இவர் படுத்திருக்க வேண்டியதில்லை. செயல்பட வேண்டியவர், வாழ வேண்டியவர். ஆண்டவரின் நோக்கமும் செயலும் அம் மனிதரை கீழ்படிய செய்கிறது. இதனால் புது ஆற்றல் பெறுகிறார். பிணியாளியின் குறைவு நீங்கி புது மனிதராக்குதலே இறைவனின் திட்டம். யாவரும் குறைவற்றவராக விளங்க ஆண்டவர் எப்போதும் செயல்பட்டுக் கொண்டேயிருக்கிறார் (யோ5:17).

• • •

# 9

## அந்நியரின் அடைக்கலம்

**(லூக்கா: 17:11-19)**

என்னுடைய திருப்பணியின் ஆரம்பக் காலத்தில் ஒருங்கிணைந்த சென்னை வேலூர் பேராயத்தினை சேர்ந்த தீனபந்துபுரம் என்னுமிடத்தில் சமூகப்பணியின் காவலர் அருள்திரு. ஜோசப் ஜான் அவர்களிடம் பயிற்சிக்கென அனுப்பபட்டேன். அவர் என்னை வாரமொரு முறை கீரைசாத்து எனுமிடத்தில் உள்ள தொழுநோயினர் நடுவே திருப்பணி ஆற்றப் பணித்தார். இம்மக்கள் ஒன்றாக வாழ்க்கை நடத்துவர். எங்கே போனாலும் தனியே செல்ல மாட்டார்கள். சேர்ந்தே வாழும் இவர்களுள் பெரும் ஒற்றுமை காணப்படும். நோயின் கொடுமை, சமுக புறம்பாக்கப்படுதல், வறுமை மற்றும் சாதி - சமய இனம் அனைத்து வேற்றுமைகளையும் கடந்து ஒற்றுமையுடன் வாழ்வதைக் கண்டேன். இத் திருமறைப் பகுதி அத்தகு காட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு.

**சத்தமிட வேண்டியவர்களின் அபயக் குரல்:**

ஆண்டவர் சமாரியா, கலிலேயா வழியாக எருசலை நோக்கி செல்லுகிறார். சமாரியா புற இனத்தவர் பகுதி. கலிலேயா

[illegible] இருவகையான [illegible] கருதப்பட்டனர். [illegible] ஆனால் இவ்விதிகள் [illegible] இந்த தொழுநோயாளர் [illegible] 152 அடி தூரம் நின்று தீட்டு தீட்டு என குரலெழுப்ப வேண்டியவர்கள். பட்டணத்திலிருந்து ஒதுக்கப்பட்டு [illegible] வெளியே வாழ வேண்டியவர்கள் (லேவி 13:45-46). ஆனால் இவர்கள் ஊரில் [illegible] இவர்கள் [illegible] இவர்கள் ஆண்டவரின் வல்லமையை அறிந்திருக்க வேண்டும். எனவே தான் "இயேசு ஐயரே" என அழைக்கின்றார்கள். இரக்கத்தைத் தேடி எழுப்பும் குரலுக்கு ஆண்டவர் எப்போதும் பதிலளிக்கிறவர்.

**ஆண்டவரின் கட்டளையும் [illegible]**

ஆண்டவரின் ஆட்சியில் நோயுற்றோரோ, பாவமற்றோ இல்லை. குறைபாடுகள் நிறைவடையவே அவரின் நோக்கம். இறையரசில் இவர்களுக்கு தான் முதலிடம். நோய் கண்டவர்களின் அழுகுரல் ஆண்டவரை அசைக்கிறது. "குணமடைந்தவர்" என்று சொல்லாமல் நீங்கள் போய் குருவிடம் காட்டுங்கள் என்கிறார். [illegible]

ஒரு தொழுநோயாளர் குணமானவுடன் [illegible] ஒரு குருவிடம் சென்று காணிக்கை செலுத்தி குணமானதை அதிகாரபூர்வமான ஒப்புதல் பெற்ற பின் தான் மக்களோடு சென்று வாழமுடியும் (லேவி 13:14). அவ்விதம் ஒப்புதல் பெறும்வரை குணமாதல் முழுமையடைந்ததாக கருதப்பட முடியாது (லேவி 14:1-32). ஆண்டவரே நீர் எங்களை குணமாக்கினாலும் பின்னர் குருவிடம் போகிறோம் என இவர்கள் சொல்லாமல்

ஆண்டவருக்கு கீழ்படிந்ததினாலேயே புறபட்டு செல்கிறார்கள். செல்லும் வழியில் சுகம் பெறுகிறார்கள். இது எப்படி கூடும்? இவர்களை குணப்படுத்தற்குரிய சொல் ஏதும் ஆண்டவர் சொல்லவில்லை. மாறாக ஆண்டவர் பேரில் கொண்ட இவர்களது நம்பிக்கை இவர்களை குணமாக்கிற்று.

**அந்நியரின் நன்றி உணர்வும் ஆண்டவரின் பேருவகையும்:**

எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தது. அதனால் அனைவரும் சுகம் பெற்றனர். ஆனால் ஆண்டவருக்கு நன்றி சொல்ல வந்தவரோ சமுகத்தால் ஒதுக்கப்பட்ட சமாரியர். ஆண்டவரின் கூற்றுப்படிக் கண்டால், மீதமுள்ள ஒன்பது பேரும் யூதர் எனத் தெரிகிறது. அந்நியருக்கு இருந்த நன்றி உணர்வு யூதருக்கு இல்லையே என்ற ஏக்கம் ஆண்டவரின் சொற்களில் எதிரொலிக்கின்றது. இந்த யூதர் குணமடைந்ததும் உடனே குருக்களிடமும், பின்னர் தங்கள் இல்லத்திற்கும் ஓடியிருக்க வேண்டும். இந்த சமாரியரோ உடனே திரும்ப வந்து தம் தாழ்மையும் நன்றியையும் காட்டும் விதத்தில் முகங்குப்புற கீழே விழுந்து நன்றி செலுத்துகிறார். குணமான நாகமான்எப்படி எலிசாவை தேடி வந்து நன்றி தெரிவித்தாரோ(2அரசர்5:15) அப்படியே இந்த சமாரியரின் பற்றுறுதி அவருக்கு குணமளித்தது. உடல் நலத்தோடு மன நலமும் அவருக்கு உண்டாயிற்று. இறையரசின் பங்காளராக மாற இறை நம்பிக்கையே அடித்தளமாகும்.

உயிராற்றல் பெறுவதற்கு பற்றுறுதியின் தன்மை முக்கியமேயின்றி அளவு முக்கியமல்ல.

It is the quality rather than Quantity of faith needs revitalization.

• • •

# 10

## விழுந்து போனவருக்கு விசுவாச கேடகம்

(யோவான்:21:15-19)

நான் எனக்குள் முரண்பட்டவன்: தடையற்ற மனநிலை கொண்டவன், பல நிலைகளை தன்னகத்தே கொண்டவன்.

I contradict myself; I am large, I contain Multitudes.
- Walt Whitman

மனிதன் பல தன்மைகளை கொண்டவன். அதிகமாக இருதன்மைக் கொண்டவனாக செயல்படுபவன். வீரமாக பேசுபவர் கோழையாக இருப்பார். சொல்லுகிறவர்கள் செய்வதில்லை. செய்கிறவர்கள் சொல்லுவதில்லை. இருவித வாழ்வும் தன்மையும் கொண்டவர்களை பிரிந்த ஆளுமைக்குரியவர் என மனஇயல் குறிக்கிறது. (Split personality). வாழ்வின் ஓட்டத்தில் தங்களை மாற்றிக் கொள்ளுகிறவர்களும் உண்டு. அதிலே மாய்த்துக் கொள்ளுகிறவர்களும்உண்டு.

**இரு சீடரின் இருவேறு நிலைகள்:**

ஆண்டவர் இயேசுவை முப்பது வெள்ளிக்காசுக்கு காட்டிக் கொடுத்தவர் யூதாஸ். ஆண்டவர் தண்டனைத் தீர்ப்பினை ஏற்றதைக் கண்ட யூதாஸ் மனம் வருந்தினார். பாவ பரிகாரம் தேட விரும்பினார். நல்ல விருப்பம் இது. ஆனால், அவர் சென்ற இடம் வேறாயிருந்தது. ஆண்டவரிடம் செல்லுவதற்கு பதில் மீண்டும் தலைமைக் குருக்களையும், மூப்பர்களையும் தேடிப் போனார். அவர்களிடம் பாவ அறிக்கை செய்தார். பாவ மன்னிப்பு தரும் கடவுளிடம் வழி நடத்த வேண்டிய மதத்தலைவர்கள் 'நாங்கள் என்ன செய்யமுடியும்? நீயே பார்த்துக் கொள்' என யூதாஸையே முடிவெடுக்க பணித்ததன் விளைவு அவர் வாழ்வு தற்கொலையில் முடிந்தது. பாவத்தை வெறுத்து பாவியை நேசிக்கும் ஆண்டவரிடம் வராத யூதாஸ் தன் வாழ்வை இழந்துப் போனார். பாவம் இருக்கும் இடத்திற்கே அவர் திரும்பி சென்றதும், பாவ அறிக்கை செய்தவரின் நோக்கம் நன்றாயிருந்தும், அறிக்கை செய்யப்பட்ட இடம் மரணத்திற்கு அனுப்பும் இடமாயிருந்தது. சுயமாய் விருப்பத்துடன் வாழ்ந்து கடவுளை மறந்த யூதாஸின் வாழ்வு துயரமாய் முடிந்தது (மத்:27:3-10).

ஆண்டவரின் உற்ற சீடராய் வாழ்ந்து உயிரையும் கொடுப்பேன் என்ற பேதுரு அடிகள், ஆண்டவரின் பாடுகளில் பங்கேற்காமல் மறுதலித்து விழுந்துப் போனார். அழைத்தவரை அவமதித்தார். தலைமைக் குருக்கள் இல்லத்தில் குளிர்காய்ந்து கொண்டிருந்த பேதுருவை பணிப்பெண் இருமுறையும், சூழஇருந்தவர்கள் ஒருமுறையும் ஆண்டவருடன் இருந்தவர் இவரே எனக் குறிப்பிடும்போது பேதுரு ஆண்டவரைத் தெரியாது என்று மட்டும் சொல்லாமல் சபிக்கவும் சத்தியம் பண்ணவும் செய்தார் (மாற்கு:14:66-71). ஆண்டவரோ, பேதுருவைக் கூர்ந்து

நோக்கினார் (லூ.22:61). ஆண்டவரின் பார்வைக்குத் தான் எவ்வளவு வல்லமை. அவரின் பார்வையிலிருந்து தப்ப இயலுமா! பார்வை ஒன்றே போதுமே ! பல்லாயிரம் செய்திகள் அது கூறுமே ! மந்த நிலையில், தூக்க கலக்கத்திலிருந்த பேதுருவை அவர் பார்வை உயிரடைய செய்தது. பேதுரு தம் குற்றத்தை நினைத்து மனம் நொந்து அழுகிறார். குற்றத்தை ஒப்புக் கொள்ளுவதும் மனம் உடைந்து அழுவதுமே பாவமன்னிப்பு பெறுவதற்கு முதற்படியாகும். மனந்திரும்புதல் என்பது சொல்லிலோ அல்லது உணர்ச்சியிலோ அல்ல. அது மனதில் ஏற்படும் உள்ளான மாற்றம். பாவ மனப்பான்மையிலிருந்து நல்லொழுக்கத்திற்கு மாற்றும் தன்மையுடையது; மனந்திரும்தலும் பற்றுறுதியும் ஒன்றாக இணைந்தது என்கிறார் Dr. ஜான் ஸ்காட் எனும் வேத அறிஞர். "Repentance is a matter neither of emotion nor of speech; it is an inward change of mind and attitude toward sin which leads to a change of behaviur. Repentance and faith belong together" Dr. John Stoott.

**மும்முறை மறுதலித்தவரிடம் கேட்கப்பட்ட மூன்று கேள்விகள்:-**

பாவ மன்னிப்பு பெற்று, உயிர்த்த ஆண்டவரைக் கண்டு, புதிய கட்டளை பெற்ற பின்பும் கூட பேதுருவுக்கு மனதில் கட்டுபாடு இல்லை. சிலருக்கு எவ்வளவு வசதிகளும் பதவிகளும் வந்தாலும் மீண்டும் பழைய வாழ்வில் சுகம் காண விரும்புவர். பேதுருவின் நிலையும் அப்படியே. பழைய வாழ்வின் மேலிருந்த பற்று அவரை உந்திக் கொண்டேயிருந்தது. கடலையும், படகினையும், மீனையும் விட்டுவிட அவரால் முடியவில்லை. பாறையாக இருக்க வேண்டியவர் மணலாக இருக்க விரும்புகிறார். கடலலைப்போன்ற சோதனைகள் மோதிடினும் அசையாத பாறைபோன்ற வாழ்வினை ஆண்டவர் அருள விரும்புகிறார்.

இவரோ மனவாக ஆதாரமற்ற உலக வாழ்வினையே தேடுகிறார்.

அழைத்தவர் எப்போதும் அமைதியாயிருப்பதில்லை. மீண்டும் மீண்டும் அழைக்கிறார். பேதுருவை தன்னிடம் சேர்த்துக் கொள்ள தானே இறங்கி வருகிறார். தேடி வருகிறார். கடல் அலைகள் நடுவே பேதுருவை அழைக்கிறார். அவரை பார்த்து நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்கிறார். இக் கேள்வி மிக சாதாரணமாய் தோன்றிலும் ஆண்டவர் மிக ஆழமான பொருளில் இக்கேள்வியை எழுப்புகிறார். 'அன்பாயிருக்கிறாயா' என்பதற்கு ஆண்டவர் பயன்படுத்தும் சொல் 'அகப்பே' (agape) எனப்படும். இதன் பொருள் நிபந்தனையற்ற அன்பு (unconditional love), வென்றிட இயலாத அன்புசெயல் (unconquerable benevelonce), தோற்காத மகிழ் விளைக்கத்துடன் கூடிய நட்புணர்வு (Undefeatable good will) கடவுள் மனுக்குலத்தின் மீது கொண்ட அன்பு இதுவே (யோ3:16) பேதுருவே ! உம்மீது அளவில்லாமல், எந்த பலனும் எதிர்பாராமல், உனக்காக அர்ப்பணித்த அன்பினைக் கொண்டுள்ளேன். நீரும் அப்படிப்பட்ட அன்புக் கொண்டுள்ளீரா என வினவுகிறார்.

பேதுரு அளித்த பதில் வேடிக்கையானது. தமிழில் நேசிக்கிறேன் உமக்குத் தெரியுமே' எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆண்டவர் தெய்வீக அன்பினைப் பற்றி பேசுகிறார். பேதுரு ஆண்டவரே உம்மை 'நேசிக்கிறேன்' எனக் கூறுகிறார். பேதுரு பயன்படுத்தும் கிரேக்க சொல் பிலேயோ (Phileo) இதன் பொருள் விரும்புவது (to be fond of) பிரியமாயிருப்பது (affec-tionately) பேணுவது (cherish) களிகூறுதல் (Pleasure). இச் சொல் உலக பொருட்கள் மீது கொண்ட பற்றினைக் குறிக்கும். இந்த கடல், படகு, மீன்களை நான் விரும்புவது போல் உம்மையும் நேசிக்கிறேன் என்கிறார் பேதுரு. ஆண்டவர் இரண்டாம் முறையும்

'அகப்பே'எனும் சொல்லை பயன்படுத்தி பேதுருவை முழுமையான வாழ்விற்கு அழைக்கிறார். பேதுருவோ மீண்டும் 'பிளேயோ' என்ற சொல்லையே பயன்படுத்துகிறார்.

ஆண்டவர் மூன்றாந்தரம், பிளேயோ என்ற சொல்லைப் பயன்படுத்த பேதுரு நடுங்கி தாழ்ந்து பதில் தருகிறார். தன்னை உணர்ந்து தன்னிடம் உள்ள எல்லாவற்றைக் காட்டிலும் நீரே என் ஆண்டவர் என அறிக்கை பண்ணுகிறார். தான் அளித்த பதிலுக்காக துயரப்படுகிறார், வேதனைபடுகிறார், உள்ளத்தின் ஆழத்திலிருந்து அறிக்கை செய்கிறார். ஆண்டவர் அருளும் அழைப்பின் ஆழம் பேதுருவுக்கு இப்போது புரிகிறது. பின்னர் பேதுரு கடவுளின் அன்பினை அனுபவித்து தான் எழுதிய கடிதத்தில் 'அகப்பே' எனும் சொல்லை ஒன்பது முறை பயன்படுத்துகிறார். தெய்வீக அன்புக்கு எல்லைகளில்லை. வானமே அதன் எல்லை!

**ஒப்படைப்பற்ற இறைப்பணி உடைந்துப்போன திருப்பணி :**

ஆண்டவர் பேதுருவை இறைபணி குறித்து எச்சரிப்பு தருகிறார். இறைப்பணி ஆற்ற உள்ளமும் உடலும் இடம் தரவேண்டும். இறைப்பணியில் சுகம் தேடுகிறவன் இறைமகனாக இருக்க இயலாது. இளைஞராக இருப்பவன் தன் வழிகளில் நடக்கிறான். அவனுக்கு துணை ஏதும் தேவை இல்லை. வயது சென்றவருக்கு தன் விருப்பப்படி வாழ இயலாது. அவர் விருப்பம் ஒருபோதும் நிறைவேறாது. கடவுளின் திருப்பணி என்பது கடவுளின் விருப்பத்தை ஆற்றும் பணி. தன் விருப்பத்தை தேடுகிறவனுக்கு அங்கே இடமில்லை. இறைப்பணி என்பது இறைவனுடன் சேர்ந்து ஆற்றும் பணி. அதில் பாடுகள் இருக்கும். அதில் பங்கு பெற்றே ஆகவேண்டும். பேதுரு அடைய போகும்

பாடுகள் மரணத்தைக் குறித்தே ஆண்டவர் பேசுகிறார். அதற்கென்றே அவரை ஆயத்தப்படுத்துகிறார். (யோ21:18).

கி.பி 64இல் ரோமாபுரியில் தீ பற்றி எரிந்தது. அதற்கு பின் நீரோ மன்னனின் சதியால் ரோமாபுரியில் அநேக கிறிஸ்தவர்கள் பாடுகளை அனுபவித்தார்கள். அக் காலத்தில் பேதுரு இரத்த சாட்சியாக மரித்துப் போனார்.

ஆண்டவரே! எங்களுக்கு துன்பங்களும் பிரச்சனைகளும் வேண்டாம் என வேண்டிக் கொள்ளாமல் அவற்றை ஏற்றுக்கொள்ள உம் பெலனும் ஞானத்தையும் தாரும் என வேண்டிக் கொள்ளுவோம்.

• • •

# 11

## கடவுள் நம்முடன் 'இம்மானுவேல்'

**(சகரியா : 2:10-13 2 கொரி :6:16-18, சங்: 46, மத்தேயு : 1:18-25)**

**ம**னிதன் கடவுளைத் தேடி மலைகளிலும், நீருற்றுகளிலும், காடுகளிலும் அலைகிறான். தன்னை ஒறுத்து; ஒடுக்கி கடும் தவம் பல செய்து சடங்குகளை ஆசரித்து கடவுளை காண முயலுகிறான். கடவுள் தன்னுடன் இருக்கிறார் என்ற உண்மையை மறந்ததும், கடவுளைக் காண தன்னை ஏற்புடையவனாக மாற்றிக் கொள்ளாததுமே அவனுடைய தோல்விகளுக்கு காரணம்.

சிறையிருப்பிலிருந்து யுதர் சுமார் 50,000 பேர் செருபாயேல் யோசுவோ தலைமையில் கி.மு. 530-ல் தாயகம் திரும்பினர். உடனடியாக ஆலயத்தின் திருமேடை கட்டப்பட்டது. திருக்கோயில் கட்டுமான பணி ஆரம்பமான சூழ்நிலையில் அருகே வாழ்ந்த சமாரியர் எதிர்ப்பும், பாரசீக ஆட்சியின் எதிர்ப்பும் கட்டுமான பணிகளை நிறுத்தியபோது தீர்க்கர் சகரியாவும், ஆகாயும்

மக்களை கடவுளிடம் மனந்திரும்ப அழைக்கின்றனர். புதுப்பித்த நகரத்தில் அமையும் புதுப்பித்த திருக்கோவிலிலிருந்தே மேசியா ஆளுகை செய்வார் என்ற செய்தியை எடுத்துரைக்கிறார் தீர்க்கர். பகைவருக்கெதிராக கடவுளே மதிலாகவும் பாதுகாவலாகவும் இருப்பார் என உரைக்கிறார் (ஏசா:26:1; எசே. 38:11) கைகளினால் கட்டப்பட்ட மதில்களில் நம்பிக்கை கொள்ளாது கடவுள் பேரில் நம்பிக்கை கொள்ள அழைக்கிறார். பல நாட்டினரும் கடவுளிடம் சேருவார்கள். மக்களுடன் வாசம் செய்யும் கடவுள் அவர்களை பாதுகாத்து வழிநடத்துகிறவர் என உரைக்கிறார். கடவுள் எங்கேயோ இருக்கிறவர் அல்ல. மக்களுடன் இருந்து அவர்கட்கு பாதுகாவலாக, துணையாக நடுவில் இருக்கிறார் என்பதை அறிய மனந்திரும்புகள் என்றழைப்பு தரப்படுகிறது.

பவுல் அடிகளார் கடவுளை பற்றிக் கொண்ட மக்களை புதிய படைப்பின் மக்களாக ஏற்றுப் பேசுகிறார். இவர்கள் உலகினின்று வேறுபட்டவர்கள். பல உருவகங்களின் மூலம் இதனை வலியுறுத்துகிறார். கடவுள் தம் மக்களிடையே வாசம் செய்கின்றபடியால் கடவுளுடைய ஆலயம் மக்களே என வலி யுறுத்துகின்றார். இங்கு ஆலயம் என்பதை குறிக்க பயன்படுத்தப்படும் சொல் கோவிலின் கருவறை (holy of holies). கடவுள் தங்கியிருக்கும் மாதூய இடம். கருவறையாக நீங்கள் இருக்கின்றீர்கள் என்கிறார். கடவுள் தம்மக்களுடன் உறவு கொண்டிருப்பதால்தான் இப்படி மக்களுடன் உறைகிறார். இதனை வலியுறுத்த பழைய ஏற்பாட்டின் பகுதியான ஏசா:52:11; 2 சாமு:7:14 எடுத்து கடவுள் கொண்டுள்ள உறவைப் பற்றி பேசுகிறார். கடவுள் தம்முடைய மக்களுடன் இருக்கிறார். மக்களுடன் உரிமையும் உறவும் கொள்ளும் கடவுளுடன் மக்கள் இணைந்துள்ளனர்

என்பதே செய்தி

நற்செய்தி பகுதி கிறிஸ்மஸ் கால செய்தியாகவே திருச்சபையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இம்மானுவேல் என்ற பெயருக்கு மாற்றுப் பெயராகவே இயேசு என்ற பெயர் சூட்டப்பட்டதாக மத்தேயு குறிப்பிடுவதிலிருந்து, இயேசுவினால் வரும் மீட்பு கடவுள் நம்மோடு இருப்பதினால் ஏற்படும் மீட்பு என்பது முக்கிய கருத்தாகும். இங்கு பயன் படுத்தப்படும் திருமறை பகுதி ஏசா:7:14 மத்தேயு பழைய ஏற்பாட்டின் ஆழ்ந்த கருத்தினை உணர்ந்து பேசுகிறார். இம்மானுவேல் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்ற இக் கருத்திற்குப் பின் இரு கருப்பொருட்கள் அடங்கியுள்ளன. முதலாவதாக, பழைய ஏற்பாட்டில் கடவுள் ஏற்படுத்தும் உடன்படிக்கையின் உச்சகட்டமாக இக்கருத்து இங்கு சொல்லப்படுகிறது, நான் உங்கள் கடவுள்; நீங்கள் என் மக்கள் என்ற உறுதியான உடன்படிக்கையின் செயல் பகுதியாக இது அமைகிறது. மத்தேயு இக்கருத்தினை 18:20லும் குறிப்பாக 28:20 இன்னும் வல்லமையாக வலியுறுத்தி கடவுள் எப்போதும் மக்களுடன் இருக்கிறார் என்ற செய்தியை தருகிறார். இரண்டாவதாக, கடவுளின் மகிமை, கடவுளின் பிரசன்னம், தம் மக்களுடன் நிலையாக தங்கியிருப்பது என்ற கருத்தை அறிய முடிகிறது.,. மக்கள் மீது ஒளிர்ந்துக் கொண்டு அசைந்துக் கொண்டிருந்த பிரசன்னம் இப்போது நிலையாக மக்களுடன் தங்கி விடுகிறது., இஸ்ரவேலரின் பயணத்தில் இருந்த கடவுளின் பிரசன்னம் (யாத்:25;8, எண் 35:34) உடன்படிக்கை பெட்டியின் மேலிருந்த பிரசன்னம் இப்போது ஆள்தன்மை கொண்டவராக வந்துள்ளார் என்று செய்தி அருளப்படுகிறது. சாலமோன் அரசின் ஆதங்கம் இங்கு நிறைவு அடைகிறது. (11அரசர் 8:22-53) கடவுள்

அவ்வப்போது தோன்றி வழி நடத்தி செல்லும் பிரசன்னத்திற்குரியவர் என்பது நீங்கி, நிலையாக எப்போதும் மக்களனைவருடனும் உறவு கொண்டு வாழ்பவர் என்பதே அருட் செய்தியாகும்.

(வருகையின் காலம் நான்காம் ஞாயிருக்காகை (19.12.1999) திருத்துதுவர் நூலுக்கு எழுத்தப்பட்ட அருளுரை.)

• • •

# 12

## புதிய மானிடம் புதிய பயணம்

**(எரேமியா: 31:7-14, எபேசி :2:11-22**
**சங் : 80, மாற்கு : 5:1-20)**

மனிதன் எப்போதும் புதுமையை தேடுகிறவன், புதிய முயற்சிகள், புதிய படைப்புகள், புதிய நாகரிகம் என வாழும் மனிதன் ஒரு புதுமை விரும்பி, ஆனால் அவன் செயல்கள் யாவும் குறைவுடையதும், நிலையற்றதாகவும் உள்ளன. கடவுள் மனுக்குலத்திற்கு அருளும் புதுமை முழுமையானது நிறைவானது, நிலையானது, நித்தியமானது.

எரே.31:7-14 பகுதி புதிய விடுதலைப் பயணம் எனப்படும். எகிப்திலிருந்து இஸ்ரவேலர் கானானுக்குள் கடந்து சென்றது முதல் விடுதலைப் பயணம். அது சோதனைகளும், முறுமுறுப்பும், கசப்பும் நிறைந்தது. ஆனால், இது மகிழ்வுடன் கூடிய வெற்றிப் பவனி; சிறையிருப்பினின்று தாயகம் திரும்புவோருக்கும், மற்ற நாட்டினருக்கும் மகிழ்ச்சி தரும் பயணம். கடவுள் தம் மக்களை

மீட்கிறார், எனவே அனைவரும் மகிழ்ந்து பாடுங்கள் என்றழைப்பு தரப்படுகிறது. மீதியானவர்களாகிய இவர்கள் எல்லோரும் எளியவர்கள், முடமானோர், பார்வையற்றோர், பெண்கள், குழந்தைகள், முதல் விடுதலை அனுபவத்திற்கு நேர் மாறாக கடவுள் இவர்களுக்கு எப்போதும் நீரூற்றையும் செழுமையையும் அருளுகிறார் (யாத் 17:1-7 எண் : 20:1-13). கடவுள் தம் மக்களை சேர்த்துக் கொண்டு உடன்படிக்கையை புதுப்பிக்கிறார். மேய்ப்பராயிருந்து நடத்துவேன் என்ற பாதுகாப்பின் உறுதியைத் தருகிறார். இந்நிகழ்வில் பங்கு பெற அனைவருக்கும் அழைப்பு தருகிறார். வயது வேறுபாடின்றி அனைவரும் ஒன்றித்து மகிழ அவர்கள் துக்கத்தை மாற்றி மகிழ்ச்சிபடுத்துகிறார். பலிகளின் கொழுப்பினை ஆசாரியருக்குரியதாக்காமல், கடவுள் தரும் செழிப்பும் வளமையும் வாழ்வும் அனைவருக்கும் அளித்து நிறைவாழ்வு பெற அழைக்கிறார். கடவுள் உருவாக்கும் புது மனுக்குலத்திற்க்கு நிறைவாழ்வும், மகிழ்வும், செழிப்பும், பாதுகாப்பும் அருளப்படுகின்றன என்பதே செய்தி.

எபே.2:11-22 பகுதி எபேசிய கடிதத்தின் மையக் கருத்தை வடித்து தருகிறது. பிளவுபட்ட மனித சமுதாயம், அச்சமுதாயததிற்கு ஒப்புரவு கொணரும் கிறிஸ்து, கிறிஸ்துவின் பணியினால் ஏற்பட்ட வாழ்வும் வளர்ச்சியும் திருச்சபையில் சுட்டிக் காட்டப்படுகிறது. மீட்புக்கு முன் யூதர், புறவினத்தார் இருவருமே பாவத்தில் மூழ்கி இருந்தனர். இருவருக்கும் அது பொது நிலை. ஆனால் மீட்பினை வெவ்வேறு கோணங்களில் இருவரும் அணுகி வந்தனர்; யூத புறவினத்தார் வேறுபாட்டினையும், கிறிஸ்துவின் மீட்பால் விளைந்த ஒற்றுமையையும் அதன் வளமையையும் இப்பகுதி எடுத்துக் காட்டுகிறது. புது மனுக்குலம் படைத்து சமாதானம் செய்ய,

சட்டங்கள், கட்டளைகள் வெறுமையாக்கப்பட்டன. பகைமை ஒழிந்தது. கிறிஸ்துவின் உடலில் அனைவரும் ஒன்றாக்கப்படுகின்றனர். ஒன்றாக்கப்பட்டவர்கள் இனி அந்நியரல்ல, அவர்கள் வெளிநாட்டினருமல்லர். அனைவரும் இறைமக்கள். கடவுளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இயேசுவே இம்மாளிகையான ஆலயத்தின் மூலைக்கல். புது மனுக்குலம் வேறுபாடுகளற்ற மீட்கப்பட்ட கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட மாளிகை.

புது மனுக்குலம் உருவாக்க ஆண்டவர் தாமே சரிசனையோடு புறவினத்தாரை தேடிச் சென்று சுகப்படுத்தும் செயலை மாற்கு 5:1-20ல் காண்கிறோம். புற இனத்து மனிதராயினும் (ஏசா:65:1) அவர்களும் கடவுளின் பிள்ளைகள், நிலை வாழ்வுக்கு உரியவர்கள் என மீட்பு பணி ஆற்றும் ஆண்டவர் இங்கு பேய் பிடித்தவனின் வேதனைகளையும் சங்கிலிகளையும் நீக்கி முழுமையாக்குகிறார். தன்னை வதைக்க வேண்டாம் என்று கடவுள் பெயரால் கெஞ்சும் பேய் இயேசுவின் வல்லமையினால் தனக்கு வரும் அழிவிலிருந்து தப்பிக்க வழிதேடும் வஞ்சகத்தினை அறிந்து இயேசு கண்டிப்புடன் அப்புறபடுத்துகிறார். மனிதனை விடுத்து பன்றிகளுள் புகுந்த பேய்கள் பன்றிகளையும் சேர்த்து கடலில் வீழ்ந்து மடிகின்றன. புற இன மக்களுக்கு தீங்கு செய்ய அல்ல, பேய் படை அவமானப்பட்டு அறவே ஒழியவே இந்த பன்றிகளின் இழப்பை ஆண்டவர் அனுமதிக்கிறார். மனிதனின் மீட்பு ஈராயிரம் பன்றிகள் அழிவால் உறுதி செய்யப்படுமேயானால் ஆண்டவர் அதற்கும் ஆயத்தமே என்பதை இப்பகுதி காட்டுகிறது. மனிதர் வாழ்வில் கொண்ட அக்கறையை செயல்படுத்த ஆண்டவர் துணிவுடன் ஆற்றும் பணி இது. அப்பகுதி மக்கள் ஆண்டவரை

ஏற்க மறுத்தாலும், குணமான மனிதனையே நற்செய்தியாளனாக அனுப்புகிறார் மனுக்குல மீட்பில் ஆண்டவர் கொள்ளும் அக்கறை, மனிதவாழ்வு முன் மற்றவை ஒன்றுமில்லை என்ற ஆண்டவரின் செயல் யாவும் புதுயுகத்தை உருவாக்கவே.

(கிறிஸ்து பிறப்பிற்கு பின்வரும் முதல் ஞாயிறுக்காக (26.12.1999) திருக்குடும்ப நாளுக்கு எழுதப்பட்ட அருளுரை)

• • •

# 13

# உலகின் நம்பிக்கை

**2 அரசர்கள் 5:1-15, அப்போஸ்தலர் 12:12-17**
**சங்கீதம் 48:8-14, மத்தேயு 15: 21 - 28**

உலகமெங்கும் காணப்படும் அமைதியற்ற நிலை, போர்கள், பொருளாதார பிரச்சனைகள், சாதி, சமய வேறுபாடுகள், வாழ்வியல் போரட்டங்கள் அனைத்தும் மனித வாழ்வினை அவநம்பிக்கைக்கு நேராக வழிநடத்துகின்றன. ஆனால் கடவுளோ அவநம்பிக்கையின் நடுவில் தலையிட்டு நம்பிக்கையும், நீதியும், சமத்துவமும், மகிழ்ச்சியும், அருளுகிறார். பிறப்பில் புறக்கணிப்பும், வளர்ப்பில் பாராபட்சமும், சமுதாயம் அநீதிகுட்படுத்தினும், அவநம்பிக்கையின் உலகிற்கு நம்பிக்கை ஊட்டுபவர்கள் பெண்களே. இன்றைய திருமறைப் பகுதிகள் இதனை விளக்குகின்றன.

**2 அரசர்கள் 5:1-15**

சீரியா அரசின் படைத்தலைவர் நாகமான் தம்

அரசரிடம் நன்மதிப்பும், மிக்க வலிமையும் கொண்டவர். ஆனால் தொழுநோயராகிய அவரின் வாழ்வு மலர காரணமாயிருந்தவள் ஒரு அடிமை சிறுமி. நாகமானுடன் எள்ளளவும் ஒப்பிட முடியாத, தகுதியற்ற ஒரு சிறுமி. ஆனால், அவர் இல்லாமல் நாகமான் ஒருபோதும் குணமாயிருக்க முடியாது. சமாரியா இஸ்ரவேலின் அரசமைப்பில் ஒரு புறக்கணிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட இடம். ஆனால் சமாரியாவிலிருந்த கடவுளின் தீர்க்கர் மூலம் தான் வலிமை மிக்க வீரனுக்கு புதுவாழ்வு அமைந்தது. மணல் சூழ்ந்த யோர்தானைக் காட்டிலும், தமஸ்கு நதிகளாகிய அபனா, பர்பார் சிறந்தவைத்தான்; ஆயினும் கடவுளின் வல்ல செயலுக்கு யோர்தான் போதுமானதாக இருந்தது. நாகமான் குணமடைய வேலைக்காரர்கள் காரணமாயினர். வலியவர் உடல் சிறு குழந்தை போல் மாறினது. தவறான நம்பிக்கை கொண்டவர் மெய் கடவுள் நம்பிக்கையும், அறிவிப்பும் செய்கிறவராய் மாறுவதற்கு காரணம், உலகில் ஒதுக்கப்பட்ட அடிமைப் பெண்ணும்; சமாரியாவும், வேலைக்காரரும், யோர்தானும் என்பதே உண்மை.

**அப்போஸ்தலர் 12:12-17**

யூதரை மகிழ்விப்பதற்காக, பாலஸ்தீன ஆளுநராகிய ஏரோது அகிரிப்பா (கி.பி. 37-44) திருச்சபையை துன்புறுத்துகிறார். கி.பி. 44இல் ஏரோது யாக்கோபை கொன்று, பேதுருவையும் சிறைப்பிடிக்கிறார். இச்சூழல் திருச்சபையை பெரும் கலக்கத்துக்குட்படுத்தினும், அவர்கள் ஒருபோதும் நம்பிக்கை இழக்கவில்லை. போரட்டத்தின் நடுவில் பெரும் நம்பிக்கை கொண்ட ஜெபிக்கும் திருச்சபையாக அது திகழ்கிறது (வ5). கடவுள் அற்புதமாக பேதுருவை விடுவிக்க அவர் யோவான் மாற்குவின் வீடாகிய எருசலேமில் கூடும் தலைமை சபைக்கு செல்பவரை மகிழ்வுடன் அறிவித்து வரவேற்பவர் ஒரு பெண். ரோதை எனின்

ரோஜா என்பது பொருள். பொதுவாக அடிமை பெண்களுக்கு வழங்கப்படும் பெயர். ரோதையின் அறிவிப்பு மற்றவர்களுக்கு பைத்தியமாக இருந்தது. கடவுளின் செயலில் நம்பிக்கையும், போராடும் திருச்சபைக்கு மகிழ்ச்சியும் கொண்டு வருவதற்கு காரணமாக அமைந்தவர் ஒரு அடிமைப் பெண்ணே.

மத்தேயு 15:21-28

கடவுளின் பிள்ளைகளென உரிமை கோருபவர்கள் ஆண்டவரை புறக்கணிக்க (மத்தேயு 13:53-58) அவநம்பிக்கை கொண்டவர்களை விட்டு விலகி புற இன மக்கள் பகுதிக்கு சென்று தனித்திருக்க விரும்புகிறார் (மாற்கு 7:24). புதுமை காண விழையும் மக்கள் கூட்டம் இங்கே இல்லை. மாறாக, இயேசுவின் புகழறிந்த கானானிய பெண் உதவி தேடி வருகிறார். ஆண்டவர் புற இன மக்களை நாய்கள் என அழைப்பது போல தோன்றினும் அது உண்மையில்லை. யூதர்கள் புறஇனத்தவரை நாய்கள் போலக் கருதினர். ஆண்டவர் ஒரு உவமையாக உணவு அருளப்படும் முறையை சொல்லுகிறார். ஒரே வீட்டில் ஒரே உணவை பிள்ளைகளும், நாய் குட்டிகளும் பெறுவது வழக்கம். ஆனால் சொந்த பிள்ளைகள் உணவருந்திய பின்தான் செல்ல பிராணிக்கு உணவு தரப்படும். ஆனால் உறுதியான நம்பிக்கையும், தாழ்மையான உணர்வும் கொண்ட புறஇனப்பெண் ஆண்டவரின் அருள்வாக்கை தனக்குரியதாக மாற்றிக் கொள்ளுகிறார். நாய் குட்டிகளும் வீட்டில்தானே இருக்கும். பிள்ளைகள் சாப்பிடும்போது சிதறும் உணவுகளை கால்களின் கீழ் விளையாடும் செல்லக்குட்டிகள் தின்ன முடியுமே! தன் மகள் மீட்பு பெறுவதால் யூதரின் மீட்பளவு ஒன்றும் குறையாது என நம்பிக்கையுடன் கேட்கும் பெண், இயேசுவை ஆண்டவர் என அழைக்கிறார். யார் இவர்? இவர் ஞானம் எங்கிருந்து வந்தது ? தச்சர் மகனல்லவா

இவர் என கேலி செய்யும் யூதர் எங்கே? ஒன்றும் அறியாமல் நம்பிக்கையுடன் ஆண்டவரே ! என அழைக்கும் புற இன பெண்ணின் தன்மை என்னே!

*(கிறிஸ்து பிறப்புக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறுக்கு (17.11.2002) திருத்தூதுவர் நூலுக்கென எழுதப்பட்ட அருளுரை)*

• • •

# 14

# A Challenge to Dalit Liberation

**Dalits and Caste System :**

> " *Caste system is a system of separation, a form of apartheid. In India the Caste system is the original sin or the mother of all sins.*"
>
> *V. DEVASHAYAM.*

Caste system deprives one's fundamental right, robs his basic diginity and violates the image of God in him. Caste is based on birth. It brings power, prestige, privilege and produces wealth, comfort and status to some; for others it brings shame, deprivation, destitution, dislocation, poverty and inequality. Hindus have vested interest in caste system. If caste goes, Hinduism will die. For Dalits, it is just opposite. Caste is the greatest obstacle in their progress.

The people who have been living in India from very early period, before the arrival of the Aryans are called "Dalits". They shared a common language, culture, religion, and were known to be generally powerful and prosperous with their own administrative set up and practised joint family system. The Aryans invaded India from the North West around 1500 BC. and conquered them, by using their superior military technology. The Aryans introduced a new religious system which created divisions among the natives. And their scripture made them inferior. They started to treat them as religiously unclean.

Over 3000 years and more the untouchability and the caste system spread its wings all over the Indian sub continent. The attack and threat on the lives of Dalits and Women, violation of human rights, exploitation of women occurred almost everyday. Dr. M.E. Prabakar draws a list of these atrocities in his article "Mission in a Dalit Perspective".

"Enslavement in their own country, denial of the image of God, opposition against their endeavors for self identity and self determination, persecution by the Land Lords, violations of their human and cultural rights, exploitation of women, illiteracy, unemployment, poverty etc." The Sons of the soil lost everything, (including) their dignity, respect, wealth, power and fundamental rights. The rigidities of the Brahmanical religious system of Varnas (colours) and the cycle of rebirth pushed them from

freedom to slavery.

## The first awakening among Dalits:

The first fight against the Brahmanical religion in the Indian sub continent was started by Gautama Buddha. Some 2500 years ago, the great king attained knowledge under the Bo tree. The knowledge with a vision of freedom compelled him to participate in the caste struggle of the natives. Though he was a King, he was not from the Kshatria Caste. He was the original inhabitant of India. Bishop Azariah writes that "the movement of Buddha was a movement of Liberation". Only at the time of Buddha, the natives vehemently opposed the Aryans. The message of hope and happiness taught by Buddha made people to embrace Buddhism. But the Brahmanical leaders systematically and cunningly crushed the movement and brought it under the fold of hinduism.

## The Missionary movements among Dalits:

The Indian history had a new beginning with the inauguration of East India company in 1599 A.D; Robert clive, the great warrior and administrator of East India company allowed the adi people to be part of the British army, which was originally dominated by the caste people. The devilish caste system brought a major revolt in the army in 1857. At the sametime, the Portugese started their missionary work and many embraced Christianity, but problem arose in incorporating Dalits into the fellowship

of the church. The Missionaries of the protestant churches landed in South India around 18th Century. The first protestant missionary work started in Tranguebar in 1706. The Protestant missionaries were very strong in their mission to bring the dalits into the church. Dr. John C.B. Webster in his book, "the Dalit Christians, A history" writes-the modern Dalit movement began with what Christian Missionaries called the mass movements. These were localized grass roots somewhat simultaneous, conversion movements, initiated and led by Dalits." Duncan Forrester and G.A Oddie have published important studies of the protestant Missionary attitude towards caste system and both indicated that the missionaries condemned caste and also tried to eliminate caste system within the church. William Goudie and Andrew Abraham had sacrificed their lives for the upliftment of Dalits in chingleput district. The Missionaries opened schools, hostels and hospitals and built churches in Dalit villages.

**Babasaheb B.R. Ambedkar.**

The third great awakening among dalits was created by none other than the champion of the Dalits, Babasaheb B.R. Ambedkar. He identified that the primary sources of the dalit slavery were caste system and untouchability. He himself was victimized by the caste system and experienced slavery under the caste system. After experiencing the devilish activities of the caste system

in hinduism, he proclaimed " I was born a Hindu, but I will never die a Hindu". His writings and speeches opened the eyes of many dalits and a great revolt happened in the sub continent in 1920 which made the Dalits aware of their rights as citizens of free India.

**20th century awakening among Dalits.**

The church leaders of the last century have created a landmark in the history of Dalit Christians. The leaders' concern, care, comittment and interest for the upliftment of dalits brought a radical change in the lives of dalits. Dr. K. Rajaratnam, the former president of NCCI and the Director of Gurukul theological College and Research Institute started the very first department of Dalit thelogy. The former Moderator of CSI Bishop. Victor premsagar and former Bishop of Madras Diocese, M. Azariah raised their voices for dalits in the World Council of Churches, which assembled at vancovar, Canada. Rev. G. Dyvasirvatham, the General Secretary of the CSI Synod boldly started the Dalit and Advasi department in the synod. Bishop Devasahayam's Scholarly writings and bible studies on Dalit issues, Dr. James Massey's and Dr. K. Wilson's contributions have all created inspiration and challenge in the minds of young dalits.

**Reflection on the text. (John 4 : 4 - 42)**

Omri, the Seventh king of Israel ruled the country between 885 - 874 B.C. Omri bought a hill from

shemer for two talents of silver. He built his capital on the hill and named it as Samaria after shemer, the owner of the hill (I kings 16 : 24). In 725 B.C, Shalmaneser, the King of Assyria invaded Israel and carried the Israelites to Assyria. Again in 722 B.C, Sargon II captured Samaria and brought people from Babylon and placed them in the cities of Samaria. The settlers followed the law of the land, practiced their religious customs and mixed with the Israelites through marital life. Now these people came to be known as Samaritans ( II Kings 16:17), The Jews hated the Samaritans because of their polluted religious practices and their intermarriages with the Jews. During the time of Ezra and Jesus (LK:9:51) the Jews treated Samaritans as outcastes.

The usual route from Judea to Galilee lay through Samaria. But the pilgrims usually avoided Samaria and prefered a longer route to Galilee. Jesus chose to travel via samaria for a particular purpose. The disciples were also with him. Jesus came to a town called " Sychar". Originally the name of the town was "Shechem". The town was bought by Jacob, from the children of Hemor for one hundred pieces of silver ( Gn:33:19). He erected an altar there and called "El, Elohe Israel" which means "God, the God of Israel". Jacob was a man of problems. He was greatly afraid and distressed to meet Esau, his brother. God showed kindness to him and Esau treated him gracefully. Jesus wanted to show that the God is the God of the oppressed and always merciful and kind to the people who are in suffering.

## The Samaritan woman, the Dalit of the Dalits

*"Dalit women are the Dalit among Dalits"*
*Gail Omvedt.*

*Hindu Caste system is a Pyramid of earthernware pots, Shudras and the untouchables at the bottom. within each earthenware pot, men are at the top and women of that caste are at the bottom, like crushed and wasted powder. And at the very bottom are the Dalits and below them are the suppressed Dalit women.*

*Dr. B. R. Ambedkar*

The Samaritan woman was a Dalit. She was a Dalit among Dalits. she was oppressed and victimized not once but four times.

1. The male dominated Society pushed her from centre to the bottom of the layer.

2. Religiously, she was inferior and unclean

3. Politically, an outcaste

4. Sexually, exploited.

**Jesus and Dalit woman:**

Jesus came to sychar and sat near the well. He sat

down on the ground. The Greek word **'Ge'** is used here. It means sat on the ground. There is another word in Greek – **'Pege'**, means ' on the top'. Jesus the son of God threw away his authority, holiness and sonship and sat on the ground. He simply identified himself with the outcaste people. Jesus followed the example of the prophet Ezekiel. God commissioned Ezekiel, as a prophet (originally he was a priest), to carry out the work with the people in exile. Ezekiel sat with them and shared their sorrows and sufferings. He consoled them and reassured them of their freedom (Eze :3:15). Here Jesus has played the role of Ezekiel the prophet; He enquired the Samaritan woman about herself, her sufferings and her oppressed life in the hands of the male dominated society. He shared the message of Goodnews and offered her the living water and the eternal life.

**The Dalit woman became the first missionary:**

The woman did not understand the real meaning of living water. So she argued with Jesus. She lamented her family tradition and boasted about their religious practice at Mt. Gerezem . Jesus slowly explained to her about the meaning of true worship and eternal life. Also he revealed the secrets of her sinful life. All these made her to accept him as Messaiah. She confessed her sins and ran to her village and proclaimed the good news to all her brothers and sisters. The experience and taste of Salvation pushed her into action. She was the first dalit missionary

to the Dalits. She was the true disciple of Jesus Christ and proclaimed the good news to the suffering Community.

**Christian response to the Dalit struggle:**

> *"Christian leadership seeks to serve rather than to dominate, It encourages, inspires, and respects rather than exploit other personalities. It reflects, prays and acts on Jesus christs words Mat : 20:27"*
>
> *Dr. Anthony D. Souza*

Generally, leadership means power, authority honour and prestige, But Christian leadership is different from secular leadership. Before responding to the Dalit issue, first of all we must see the Church with an open mind. Of the total of about twenty million Christians of all denominations in India today about 60% are scheduled castes. But unfortunately they have no place in the church. A handful of higher caste Christians rule the church. The outcaste Christians actually suffer double injustice (Twice Alienated by Dr. K. Wilson). The government discriminates them on one side and the higher caste Christians oppress them on the otherside. This is the condition of Dalit Christians. What is our response and how are we going to solve this issue? The Nazereth Manifesto of the Lord (Lk: 4:16-19). clearly indicates the real mission of the Church; The same Lord reiterated this again in the parable of the last judgement and asked his

disciples to have concern about the least of these brothers and sisters (Mat :25:40). Jesus is our role model. Jesus spent three full years with the marginalized, oppressed and downtrodden people. He sat with them, ate with them, slept with them and finally he gave his life for them. Like Jesus, the christian leader must have the mind of sacrifice, committment and concern towards the people in suffering, struggle and oppression, The leader must create awareness among the oppressed, so that the Dalit realises that his slavery is not something destined by God, but that he has everyright to live a normal life like every other human being. Only such an awareness education can help him to lead a normal life. This normalcy will bring self diginity and self confidence in them. The self understanding and education will help them in reconstructing and redoing the image of God. Let us go forward and identify ourselves with the people of God and participate fully in their emancipation and empowerment.

*(This Bible Study was presented at the CSI Synod Rural Youth Leadership Training Programme. on 27 July 02)*

• • •



அருள்திரு. D. சாமுவேல் ஜேக்கப் அவர்கள் 23.2.1952 அன்று பிறந்தார். பள்ளி கல்வியினைத் தொடர்ந்து, சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் இளம்கலை பட்டப்படிப்பில் தத்துவம் பயின்றார். மாணவர் கிறிஸ்தவ இயக்கம் **(SCM)** மற்றும் பேராய இளைஞர் இயக்கப் பணிகளின் மூலம் பேராயர் லெஸ்லி நியூபிகின் அவர்களால் அறியப்பட்டு, திருப்பணிக்கென அழைக்கப்பட்டார். ஒருங்கிணைந்த சென்னை - வேலூர் பேராயத்தின் உபத்தலைவராக இருந்த அருள்திரு. ஜோசப் ஜான் அவர்களிடம் தீனபந்துபுரத்தில் பயிற்சி ஆயராக பணி புரிந்தார். தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் இறையியல் பட்டம் பெற்று (1974 - 77), உதவி ஆயராகவும் (1977), ஆயராகவும் (1978) அருட்பொழிவு பெற்று கடந்த இருபதைந்து ஆண்டுகளாக சென்னைப் பேராயத்தில் பல திருச்சபைகளில் பணியாற்றி வருகிறார். முதுகலை **(M.A.)** தத்துவமும், நகர கிராமிய தொழில் திருப்பணியில் **(URBAN INDUSTRIAL RURAL MISSION)** இங்கிலாந்து நாட்டில் மேற்கல்வியும் கற்றவர். தென்னிந்தியத் திருச்சபை மற்றும் பேராய திருப்பணிக் குழுக்கள் பலவற்றில் பணிபுரிந்திருக்கிறார். பேராயத்தில் இளைஞர் பணி வாரிய இயக்குனர் (1981-84), தொழிற் சமூகத்திற்கு கிறிஸ்தவ சேவைக் குழு இயக்குனர் (1987 - 90), தலீத் பணி வாரியத்தின் முதல் இயக்குனர் (1994 - 97) வட சென்னை வட்டாரத் தலைவர் (1995-97) மற்றும் பேராய செயலர் (1997-2001) என பல பொறுப்புகளை ஏற்று பணியாற்றிவர். அகில இந்திய திருச்சபையின் நகர கிராமிய திருப்பணி நிர்வாககுழு **(NCCI-UIRM)** உறுப்பினராகவும் (1988-91) தென்னிந்தியத் திருச்சபையின் செயற்க்குழு, நிர்வாக குழு, சட்ட திருத்தக் குழு, மற்றும் பல திருப்பணிக் குழுக்களில் சிறப்பாக பணியாற்றியுள்ளார்.